பக்கங்கள்:-பன்னிரண்டு
Registered as a News paper in Sri Lanka

26 AUG 2004

# வலம்புரி
VALAMPURI

விலை ரூபா. 7.00

சங்கு 05 வள்ளுவர் ஆண்டு 2035 ஆவணி 10 வியாழக்கிழமை (26.08.2004) தொலைபேசி - 2223378 ஒலி 251

ராம்கோ சிமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது.

## அரசாங்கம் படைகளை பலப்படுத்தும்போது

# விடுதலைப் புலிகள் ஆயுதரீதியாக பலப்படுவது யுத்தநிறுத்த மீறலல்ல

### கண்காணிப்புக்குழுவிடம் தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

**இலங்கை அரசாங்கம் கடற்படைக்கும், இராணுவத்திற்கும் ஆயுதங்களைக் குவித்துவரும்போது விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கொண்டு வருவதோ, ஆயுத ரீதியாக தம்மைப் பலப்படுத்திக் கொள்வதோ யுத்தநிறுத்த மீறலல்ல. இது தொடர்பாக யுத்தநிறுத்த உடன்பாட்டில் எதுவும் கூறப்படாத நிலையில் முல்லைத்தீவு சம்பவம் தொடர்பான அரசின் குற்றச்சாட்டுக்கும், சம்பவத்திற்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை என்று விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.**



தமிழீழ விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்தில் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரோடு நடைபெற்ற சந்திப்பையடுத்து விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் பத்திரிகையாளர் மத்தியில் பேசும்போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இச் சந்திப்பில் விடுதலைப் புலிகள் சார்பில் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன், கடற்புலிகளின் தளபதி கேணல் சூசை, கடற்புலிகளின் துணைத் தளபதி செழியன், சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் ஆகியோரும் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் சார்பில் அதன் தலைவர் மேஜர் ஜெனரல் ரொன் பியூறு

(12 ஆம் பக்கம் பார்க்க)

## டிப்ளோமா பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படும்

### நிதியமைச்சர் சரத் உறுதி

(யாழ்ப்பாணம்)

பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் திட்டத்தின் கீழ் உயர்தர கணக்கியல், வர்த்தக, முகாமைத்துவப் பட்டதாரிகளை உள்வாங்குவதற்கு நிதியமைச்சு அனுமதியளித்துள்ளது.

இது தொடர்பாக கடந்த 16ந் திகதி நிதியமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம யாழ். மாவட்ட உயர் தேசிய கணக்கியல், வர்த்தக, முகாமைத்துவப் பட்டதாரிகள் சங்கத்திற்கு கடிதமொன்றை அனுப்பி

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அரசும் புலிகளும் சமாதானத்திற்கு வர மக்கள் அழுத்தம் வேண்டும்!

### நோர்வே தூதுவர் யாழில் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்வதற்கு, வடபகுதி மக்களும், தென்பகுதி மக்களும் அழுத்தம் கொடுக்க வேண்டும்.

இவ்வாறு இலங்கைக்கான நோர்வேத் தூதரக இரண்டாவது சிரேஷ்ட செயலாளர் கஜஸ்ரி தொம்ஸ்டால் தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில், இணையப் பிரதிநிதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடியபோதே அவர் இக்கருத்தினைத் தெரிவித்தார்.

இலங்கைக்கான நோர்வேத் தூதரகத்தைச் சேர்ந்த இரண்டாவது சிரேஷ்ட செயலாளர் கஜஸ்ரி தொம்ஸ்டால், இணைப்பாளர் எல்.விஜயநாதன் ஆகியோர் நேற்றுக் காலை யாழப்பாணம் வருகை தந்தனர்.

யாழ் வந்த அவர்கள் யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவன இணையத்தில் வைத்து அதன் பிரதிநிதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இச் சந்திப்பின்போது அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்:-

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள நிலைமை, காலப்போக்கில் பயங்கரமானதொரு நிலையை தோற்றுவிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

நோர்வே அரசு பொறுமையைக் கடைப்பிடித்து அரசையும் புலிகளையும் சமாதான மேசைக்குக் கொண்டு வருவதற்கு பெருமளவு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது.

இதற்கு இருதரப்பும் இணங்காமல் முரண்படுவார்களானால், இலங்கைக்கு கிடைக்கும் நிதி உதவிகள் நின்று போகும் அபாயம் ஏற்படும். அந் நிதியுதவியை ஈராக், ஆப்கானிஸ்தான், சூடான் போன்ற நாடுகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் வழங்கும் நிலை கூட ஏற்படும் என்றார்.

இதேவேளை யாழ். மாவட்டத்தின் அரசியல் நிலை, யாழ். மாவட்டத்தின் அபிவிருத்திச் செயற்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சமாதான நடவடிக்கைகள் ஆபத்தான நிலையில் உள்ளன

### ரணில் விக்கிரமசிங்க எச்சரிக்கை

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியின்போது செய்து கொள்ளப்பட்ட போர்நிறுத்த ஒப்பந்தம் செயற்படுத்தப்பட்டதன் பின்னர் முதற்தடவையாக தற்போது சமாதான நடவடிக்கைகள் ஆபத்தான நிலையில் உள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி தலைமையகத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இந்த எச்சரிக்கையை வெளியிட்டார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பொலிஸ் உத்தியோகம் செய்ய இலங்கைக்கு நாம் வரவில்லை

### அமைச்சரின் குற்றச்சாட்டுக்கு கண்காணிப்புக்குழு பதில்

(கொழும்பு)

கண்காணிப்புக்குழு தனது கடமையைச் சரிவரச்செய்வதில்லை என்று பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரட்னசிறி விக்கிரமநாயக்க தெரிவித்த குற்றச்சாட்டை கண்காணிப்புக்குழு மறுத்துள்ளது. கண்காணிப்புக்குழுவினர் நாட்டிலுள்ள பொலிஸ் பொறுப்பாளர்களல்லர். அவர்கள் அரசுக்கும் புலிகளுக்குமிடையிலான போர்நிறுத்த உடன்படிக்கையை கண்காணிப்பவர்கள் மட்டுமே என ரட்னசிறி விக்கிரமநாயக்க கூறியிருந்தார்.

அதற்கு பதிலளித்துள்ள கண்காணிப்புக்குழுவினர், நாம் தொடர்ந்தும் குற்றச்சாட்டுகளுக்குள்ளாகி வருகிறோம். இவை தவறானவை. இதற்குப் பொறுப்பானவர்கள் பாதுகாப்புத் தொடர்பாக தாம் என்ன செய்கிறார்கள் என்பதைக் கவனிக்க வேண்டும். நாங்கள் இலங்கையில் பொலிஸ் உத்தியோகம் செய்ய வரவில்லை. இருதரப்பினரிடையேயான போர்நிறுத்த உடன்படிக்கையைக் கண்காணிக்கவே

(12 ஆம் பக்கம் பார்க்க)

அன்பு மாணவர்களே!
உள்ளே!
க.பொ.த (சா/த) பரீட்சை
மாதிரி வினாத்தாள்
விஞ்ஞானமும் தொழில்நுட்பவியலும்- I
ஆக்கம்:
சு.ப. கஜேந்திரன்
ஆசிரியர்

## தீவுப்பகுதி நோயாளர்களின் பாவனைக்கு அம்புலன்ஸ் படகு

### நாளை கையளிப்பு வைபவம்

(யாழ்ப்பாணம்)

தீவுப்பகுதி நோயாளர்களின் பாவனைக்கென அம்புலன்ஸ் படகு வழங்கப்படவுள்ளது.

இப் படகு கையளிப்பு வைபவம் நாளை காலை 10 மணிக்கு ஊர்காவற்றுறை இறங்குதுறையில் நடைபெறவுள்ளது. அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகர் ஆலயம் பிரதிநிதியால் இப்படகு கையளிக்கப்படவுள்ளது.

இவ் அம்புலன்ஸ் படகு நெடுந்தீவு, நயினாதீவு, எழுவைதீவு மற்றும் அனலைதீவு ஆகிய இடங்களிலுள்ள நோயாளிகளை குறிகாட்டுவான் மற்றும் ஊர்காவற்றுறை இறங்குதுறைகளுக்கு அவசர நோயாளர்களை ஏற்றிவரும்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் இராணுவம் மீது தாக்கினால் பதில் தாக்குதல் நடத்தப்படும்!

### இராணுவத்தளபதி சாந்தகொட்டகொட அறிவிப்பு

(கொழும்பு)

இராணுவத்தின் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினால் அவர்கள் மீது இராணுவத்தினர் தாக்குதல் நடாத்துவார்கள் என இராணுவத் தளபதி சாந்த கொட்டேகொட தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் இராணுவத்தினரை இலக்கு வைத்து தொடர்ச்சியாக நடாத்தப்பட்டு வரும் படுகொலைச் சம்பவத்தையடுத்தே இராணுவத் தளபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மீறி இத்தகைய கொலைச் சம்பவங்கள் இடம்பெறுகின்றன. இவை உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என அவர் வேண்டுகோள் விடுத்தார்.

யுத்தநிறுத்த காலப்பகுதியில் இராணுவத்தினருக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டியது கண்காணிப்புக் குழுவின் கடமையாகும். எனினும் நாட்டில் ஏற்பட்டுள்ள வன்முறைகளைக் கட்டுப்படுத்துவதற்கு கண்காணிப்புக் குழு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

(12 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் 'உங்கள் நாளிதழ்

# மேற்குக் கரையில் மேலும் 530 புதிய வீடுகள் பலஸ்தீனர் கண்டனம்; கைவிடக் கோரிக்கை

(ஜெருசலேம்)

மேற்குக் கரையில் 530 புதிய குடியிருப்பு இல்லங்களை அமைக்க இஸ்ரேல் திட்டமிட்டுள்ளது. கடந்த வாரம் இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷெரோன் ஆயிரம் வீடுகள் அமைப்பதற்கு அங்கீகாரம் வழங்கியிருந்தார்.

அந்த வீடுகளோடு இவ்வீடுகளும் அமைக்கப்படுமென இஸ்ரேலிய அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

1967ஆம் ஆண்டு மத்திய கிழக்கு யுத்தத்தின் போது இஸ்ரேல் கைப்பற்றப்பட்ட எல்லைப் பகுதியில் கட்டடங்கள் அமைப்பதற்கு ஆட்சேபனை கிடையாதென கடந்த சனிக்கிழமை வாஷிங்டன் குறிப்பிட்டிருந்தது. இதையடுத்தே புதிய வீடுகளை அமைக்க இஸ்ரேல் முன் வந்துள்ளது.

எனினும், இது சமாதான முன்னெடுப்புக்களுக்கு குந்தகமாக அமையுமென பலஸ்தீனர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த விஸ்தரிப்புத் திட்டத்தை உடனடியாக இஸ்ரேல் கைவிட வேண்டும். இல்லையேல் நாங்கள் எங்கள் தாயகத்தைக் கட்டி எழுப்புவதற்கு போதிய நிலமில்லாமற் போய்விடும் என பலஸ்தீன பேச்சுவார்த்தைகளுக்கான அமைச்சர் சேப் எரிடர் தெரிவித்துள்ளார். (யே)



அகதிகளான ஒரு சூடானிய வயதான பெண்ணும், இரு பிள்ளைகளும் பிரீஜின் என்னும் இடத்தில் உள்ள தற்காலிக அகதிகள் முகாமில் தங்களின் கூடாரத்திற்கு முன்னால் இருக்கின்றனர்.

# கியூபாவிற்கும் - பனாமாவிற்குமிடையே முரண்பாடுகள் வலுவடைந்து வருகின்றன

கியூபா ஜனாதிபதி பிடல் ஹஸ்ரோவை கொலை செய்வதற்கு சதிசெய்த குற்றச்சாட்டின் பேரில் பனாமாவில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் 4 கியூபாப் பிரஜைகளின் எதிர் காலம் குறித்து கியூபாவுக்கும், பனாமாவுக்குமிடையே எழுந்துள்ள சர்ச்சையை அடுத்துபனாமாவிலுள்ள கியூபாத் தூதுவரை அங்கிருந்து வெளியேறி விடுமாறு பனாமா அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது.

பிடல் ஹாஸ்ரோ 4 வருடங்களுக்கு முன்னர் பனாமாவுக்கு விஜயம் செய்தபோது அங்கு வைத்து அவரை கொலை செய்வதற்கு சதி செய்தனர் என்ற குற்றச்சாட்டில் 4 கியூபாப் பிரஜைகளை கடந்த ஏப்ரல் மாதத்திலிருந்து பனாமா அரசாங்கம் சிறையில் தடுத்து வைத்துள்ளது.

இந்நிலையில் பனாமா அரசாங்கம் இந்த எதிரிகளுக்கு மன்னிப்பு வழங்கும் சாத்தியக் கூறு காணப்படுவதால் இரண்டு நாடுகளுக்கு மிடையே முரண்பாடுகள் வலுப்பெற்றுள்ளன. இதனையடுத்து இந்நாடுகளுக்கிடையே இராஜதந்திர உறவுகள் துண்டிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

பனாமா அரசாங்கம் கியூபாத் தூதுவரை தம் நாட்டிலிருந்து திருப்பி அழைக்குமாறு கியூபாவிடம் கோரியுள்ளது. இதையடுத்து கியூபாவிலுள்ள தமது தூதுவரை திருப்பி அழைப்பதாக பனாமா அரசாங்கம் அறிவித்துள்ளது.

பனாமா ஜனாதிபதி மிராயோ மொஸ்கோ 4 எதிரிகளுக்கும் மன்னிப்பு வழங்கினால் அந்த நாட்டுடனான இராஜதந்திர உறவுகளைத் துண்டிக்கப் போவதாக கியூபா கடந்த வெள்ளிக்கிழமை அச்சுறுத்தியதை அடுத்து பனாமா அரசாங்கம் குழப்பமடைந்துள்ளது. (ப-யே)

# காதுகளைக் கவனியுங்கள்

ஒருவருடன் சண்டையிடத் தொடங்கு வதற்கு முன்னர் அவரது காதுகளை அவதானிப்பது சிறந்ததென விஞ்ஞானிகள் ஆலோசனை கூறியிருக்கின்றனர்.

சமச்சீரற்ற காதுகளைக் கொண்டிராதவர்கள் தூண்டப்படும் போது ஆக்கிரமிப்புத் தன்மையுடன் நடந்து கொள்வதாக ஒசியோ பல்கலைக்கழக ஆய்வாளர்கள் நடாத்திய ஆய்வில் கண்டு பிடிக்கப்பட்டுளளது. இதனால் அவர்கள் எதிரிகளை எளிதில் முடக்கிவிடுவார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கர்ப்பிணித் தாயொருவர் புகை பிடித்தாலோ, மது அருந் தினாலோ பல வழிகளில் சிசு அதிர்ச்சிக் குள்ளாகிறது இதன காரணமாக உணர்வு ரீதியான சமச்சீரற்ற தன்மை தோன்றுகிறது. இத்தகைய பழக்க வழங்கங்கள் சிசுவின் உணர்வு களைக் கட்டுப்படுத்தக்கூடிய தன்மையையும் பாதிக்கப்படுவதாக ஆய்வு மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

(ப-7,60)

# ஆங்கிலம் கற்கச்சென்றவர் நதிக்கரையில் சடலமாக மீட்பு

(லண்டன்)

ஆங்கிலம் கற்கச் சென்ற பிரான்ஸ் இளைஞர் ஒருவர் தேம்ஸ் நதியில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார். 22வயதான இந்த இளைஞன் லண்டனின் தென்மேற்குப் பகுதியிலுள்ள கிரிக்கெட் மைதான ஆடுகளம் ஒன்றில் வைத்து படுகொலை செய் யப்பட்டுள்ளார்.

பின்னர் இவரது சடலம் ஆற்றில் வீசப்பட்டுள்ளது. இந்தக் கொலையுடன் தொடர்புடையவர்களை தேடும் நடவடிக்கையில் புலனாய்வுப் பிரிவினரும் மோப்ப நாய்களும் ஈடுபடுத்தப்பட்டுள் ளன.

அண்மைக்காலமாக லண்டனில் படுகொலைகள் அதிகரித்து வருவதாக அந்த நாட்டுப் புலனாய்வுப்பிரிவினர் தெரிவிக் கின்றனர்.

(ப-யே)

# சமாதானப் பேச்சுக்களை தொடர தீவிரவாதிகள் மறுத்துள்ளனர்

(காட்டூம்)

சூடானில் மோதல்களைத் தவிர்ப்பதற்கான பேச்சுவார்த் தையை நடத்த தீவிரவாதிகள் மறுப்பதை அடுத்து சமாதானப் பேச்சுவார்த்தைகள் தடைப்பட்டுள்ளன.

சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஏற்பாடு செய்த் நைஜீரிய அரசாங்கம் ஏற்கனவே தீவிரவாதப் படைகளின் நடவடிக்கை களை கட்டுப்படுத்துவது குறித்து பேச்சுவார்த்தைகளை நடத்து வதற்கு சூடானிய அரசும் தீவிரவாதிகளும் இணக்கம் தெரிவித் தனர் என நைஜீரியா தெரிவித்துள்ளது.

நைஜீரியத் தலைநகரான அபுஜாவில் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டபோது டாபூரில் கிளர்ச்சிவாதிகளிடமிருந்து ஆபி ரிக்க ஒன்றியத்துருப்புக்கள் ஆயுதங்களைக்களைய வேண்டும் என்ற நைஜீரியாவின் கோரிக்கையை சூடான் அரசாங்கம் நிரா கரித்துள்ளபோதும் பிரதான கிளர்ச்சிக் குழுக்களின் இரண்டினது தலைவர்களைத் தவிர ஏனைய சகல தரப்பினரும் ஆயுதக் களை வுக்கு உடன்பட்டுள்ளார்கள் என்று நைஜீரிய ஜனாதிபதி தெரி வித்துள்ளார். (யே)

# ரஷ்ய விமான விபத்தில் 52 பேர் பலி 40 பேருடன் மற்றொரு விமானம் மாயம்

(மொஸ்கோ)

ரஷ்யாவில் சில நிமிட நேர இடைவெளி வேளையில் ஒரு பயணிகள் விமானம் விபத்துக்குள்ளாகியதுடன் மற்றொரு பய ணிகள் விமானம் காணாமல் போயுள்ளதைத் தொடர்ந்து, அந்த நாட்டின் சகல விமான நிலையங்களிலும் பாதுகாப்பு நடவடிக்கை கள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

*40 பயணிகளுடன் மொஸ்கோவின் டொமனிடோ விமான* நிலையத்தில் இருந்து புறப்பட்ட விமானம் ஒன்று மொஸ்கோவின் தென்பகுதியில் விபத்துக்குள்ளானது.

சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தகவல் தருகையில், இந்த விமானம் விபத்துக்குள்ளானதற்கு முன்னர் அதில் குண்டு வெடிப் புச் சத்தம் ஒன்று கேட்டதாகத் தெரிவித்தனர். விமானப் போக்கு வரத்து அதிகாரி ஒருவர் தகவல் தருகையில் கியூலா என்ற நக ருக்கு சமீபமாக விமானத்தின் சிதைவுகள் கண்டுபிடிக்கப்பட் டுள்ளன என்று கூறினார்.

மூன்று எஞ்சின்களைக் கொண்ட இந்த விமானத்தில் 44 பயணிகளும், 8 விமானச் சிப்பந்திகளும் பலியாகி இருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இது இவ்வாறிருக்க 40 பயணிகளுடன் மற்றுமொரு ரஷ்ய விமானம் காணாமல் போயுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

இந்த விமானம் காணாமல் போவதற்கு சில விநாடிகளுக்கு முன்னர் விமானத்தில் இருந்து ஆபத்து உதவி கோரப்பட்டதாக அந்நாட்டு அரசாங்கம் தெரிவித்துள்ளது.

கடத்தல் முயற்சியைத் தொடர்ந்து இந்த ஆபத்து உதவிக் கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கலாம் என்றும் அதிகாரிகள் மேலும் தெரிவித்துள்ளனர். (ப-யே)

# முதலாம் உலகப் போரில் பலியான இராணுவ வீரர்களின் உடல்கள் 86ஆண்டுகளின் பின் நல்லடக்கம்

(வியன்னா)

1918ஆம் ஆண்டு நடைபெற்ற முதலாம் உலகப் போரின் போது இத்தாலி மற்றும் ஒஸ்திரிய இராணுவ வீரர்களுக்கிடையே பனிமலைகளில் போர் நடைபெற்றது.

இத்தாலியில் உள்ள சான்மாண்டியோ பனிமலைப் பகுதியில் நடைபெற்ற அந்தச் சண்டையில் 11 ஒஸ்திரிய இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டனர். மரணம் அடைந்த அந்த வீரர்களின் உடல் களை அபபனி மலையிலேயே புதைத்துவிட்டு ஒஸ்திரிய இராணு வத்தினர் நாடு திரும்பிவிட்டனர். இந்நிலையில் கடந்த வெள்ளிக் கிழமை மலை மீட்புக் குழுவினர் அப்பனி மலையை வெட்டிப் பார்த்த போது ஒஸ்திரிய 3 வீரர்களின் உடல்கள் பனிமலையில் உறைந்து போய் கிடந்தது கண்டுபிடிக்கப்பட்டது. 86 ஆண்டுகளுக்குப் பின்னர் இந்த உடல்கள் நேற்று முன்தினம் ஹெலிகொப்டர்கள் மூலம் ஒஸ்திரியாவுக்கு கொண்டு செல்லப்பட்டு முழு இராணுவ மரியாதை யுடன் அடக்கம் செய்யப்பட்டது. (ப-யே)

# மனித குளோனிங் முறைக்கு பாப்பரசர் கண்டனம்

(ரிமினி)

மனித குளோனிங்குக்கு தடை விதிக்க அனைத்துத் தரப் பினரும் முன் வரவேண்டும் என கத்தோலிக்க கிறிஸ்தவ மதத் தலைவர் பரிசுத்த பாப்பரசர் ஜோன் போல் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மனித குளோனிங் மனித சமுதாயத்தை சீரழித்து விடும் கடவுளின் விருப்பத்துக்கு இது முரணானது என்றும் அவர் குறிப் பிட்டுள்ளார்.

இப்போது பரிசுத்த பாப் *பரசர் இத்தாலிய ரிமினி நகரி* லுள்ள கேன் டோல்போ பகுதி யில் தங்கியுள்ளார்.

பரிசுத்தப் பாப்பரசரை அரசி யல தலைவர்கள், மதத் தலை வர், தொழிலதிபர்கள், முக்கிய பிரமுகர்கள் ஆகியோர் வந்து சந்தித்தனர். இவர்களிடம் பேசும் போது பாப்பரசர் மனித குளோனிங் முறையை அனுமதிக் கக் கூடாது என குறிப்பிட்டுள் ளார். ஆராய்ச்சி ரீதியிலான மனித குளோனிங் முறைக்கு இங்கிலாந்து அரசு விஞ்ஞானி களுக்கு அனுமதி வழங்கி யுளளது. இந்த அனுமதியை வழங்கிய முதல் ஐரோப்பிய நாடு இங்கிலாந்தாகும். (யே)





நோர்வேக்கான இலங்கைத் தூதரக அதிகாரிகள் நேற்று காலை யாழ்.மாவட்ட பொது அமைப்புக்கள் ஒன்றியத்தில் யாழ்.மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் அதிகாரிகளைச் சந்தித்து பேச்சு நடத்தியபோது எடுக்கப்பட்ட படங்கள்.

படம்: ஜி.ஐங்கரன்





அமெரிக்காவின் உதவியுடன் யு.எஸ்.எயிட் நிறுவனத்தால் புனரமைக்கப்பட்ட மூளாய் வைத்தியசாலையின் வைத்திய விடுதி அமெரிக்கத் தூதரகத் தொடர்பாடல் அதிகாரி பிலிப் பினறன் அவர்களால் திறந்து வைக்கப்படுவதையும், வருகை தந்துள்ள மற்றைய அதிகாரிகளையும் படத்தில் காணலாம்.

படம்: ஜி.ஐங்கரன்



புலோலி மெதடிஸ்த மிசன் பாடசாலையில் தரம் 3இல் கல்வி பயிலும் மாணவர்களுக்கு யாழ்.கல்வியியற் கல்லூரி ஆசிரியர்களால் தயாரிக்கப்பட்ட கணித உபகரணப் பொதிகளின் காட்சிப்படுத்தலைப் பார்வையிடுவதைப் படத்தில் காணலாம்.

படம்: மருதங்கேணி நிரூபர்.

## ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம்

(பொன்னாலை)

தீவகம் வடக்கு - ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பிரிவின் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் எதிர்வரும் 31ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் உதவி அரச அதிபர் ஜே.எக்ஸ்.செல்வநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் இப்பிரதேச மக்களின் உணவு, குடிதண்ணீர், சுகாதாரம் மற்றும் கல்வி உள்ளிட்ட ஏனைய பல முக்கிய விடயங்கள் குறித்தும் ஆராயப்படவுள்ளதால் சம்பந்தப்பட்ட துறைகளைச் சார்ந்தவர்கள், திணைக்களத் தலைவர்கள் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோரைத் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ற-49)

* * *

(பொன்னாலை)

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவின் பிரதேச அபிவிருத்தி தொடர்பான ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இன்று நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் உதவி அரச அதிபர் எஸ்.பேரானந்தம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் உலர் உணவு நிவாரணம், துரித அபிவிருத்தித் திட்ட வேலைகள், உலக உணவுத் திட்ட வேலைகள், சுகாதாரம், போக்குவரத்து, குடிநீர் விநியோகம், மீன்பிடி, கமநல சேவைகள் மற்றும் கல்வி ஆகியன உள்ளிட்ட மேலும் பல்வேறு முக்கிய விடயங்கள் குறித்து ஆராயப்படவிருப்பதால் சம்பந்தப்பட்ட திணைக்களங்களைச் சார்ந்த தலைவர்களையும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளையும் தவறாது இதில் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

(ற-49)

## மிதிவெடியில் சிக்கி குடும்பஸ்தர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

விளானில் உள்ள காணி ஒன்றை நேற்று முன்தினம் கூலியாட்கள் 11 பேர் துப்புரவு செய்துகொண்டிருந்த வேளை அவ்வளவில் இருந்த மிதிவெடி ஒன்று வெடித்ததில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயம் அடைந்துள்ளார்.

இளவாலையைச் சேர்ந்த பாலன் மனோகரன் (வயது 38) என்பவரே இதனால் வலது காலை இழந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(ற-க-19,5)

## *லெப்.கேணல் ராஜனின் 12வது ஆண்டு நினைவு தினம்*

(பொன்னாலை)

வடுதலைப் புலிகளின் சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் முன்னாள் தளபதிகளில் ஒருவரான லெப்.கேணல் ராஜனின் 12ஆவது ஆண்டு நினைவு தின நிகழ்வுகள் நாளை வெள்ளிக்கிழமை பி.ப. 4.00 மணிக்கு அவரது சொந்த இடமான மாதகலில் நடைபெறவுள்ளது.

இந்நினைவு தினத்திற்கான ஏற்பாடுகளை மாதகல் பகுதியிலுள்ள பொது அமைப்புக்களும், தேசிய எழுச்சிப் பேரவையும் இணைந்து மேற்கொண்டு வருகின்றன.

இவர் வீரச்சாவடைந்த இடமான மாதகல் பகுதியில் உள்ள விநாயகர் ஆலய முன்றலிலேயே இந் நினைவு தின நிகழ்வுகள் நடைபெற ஏற்பாடாகியுள்ளன. (ற-49)

நல்லூரான் திருவடிக்கு



ஆறாம் திருவிழா

வாழ வழி யருளீ

அடியார்கள் ஓடி வருவார்கள் ஆறு
திருமுருகா
விடிவொன்றை வேண்டி விழுந்துந்தன் தாளைத்
தொழு தெழுவார்
கொடியோரைக் கொன்று குலம் காத்துத் தேவர்
சிறை விடுத்தாய்
தடு மாறுகின்ற தமிழர்கள்
வாழ வழி யருளே!

சிற்பி.

அபயம் அளிப்பாய் முருகா!

கந்தனே! நல்லையுறை செல்வனே!
செவ்வேளே!
உந்தனையே வந்தனை செய்கின்றோம் –
தந்தைக்கு
உபதேசம் செய்ததிருக் குமரனே! எங்கட்கு
அபயமே அளித்திடுவாய் நீ!

நாயன்மார்கட்டு ப.மகேந்திரதாசன்

கடிதில் வந்துன் அருள் தாராய்!

சாந்தி, அன்பு சமாதானம்
தமிழர் வாழ்வில் நிலைபெறவே
வேந்தே நல்லைப் பதிவாழும்
வேலா, சீலா, மிகுகோலா
காந்தா வள்ளி மணவாளா
கடிதில் வந்துன் அருள்தாராய்,
சேந்தா, கந்தா, உமைபாலா
செவ்வேல் உகந்த பெருமாளே!

வ.சின்னப்பா
தனங்கிளப்பு.

குமரன் கைவேல் போற்றி

தந்தைக்குப தேசித்த ஞான வேல் போற்றி
சஞ்சலம் போக்கிடும் சக்தி வேல் போற்றி
அன்பர்க்கருள் வழங்கு வடிவேல் போற்றி
வன்பகை நீக்கிடும் வெற்றிவேல் போற்றி
முன் தேவர்துயர் தீர்த்த சிவவேல் போற்றி
நன்றே செய் நல்லைக்குமரன்
கைவேல் போற்றி.

"நயினையான்"

## இன்று ஒரு தகவல்

# மனம் அடங்குமா?

ஒரு ஊரில் ஒரு ராஜா இருந்தார். அவர் ஒரு பூனையை வளர்த்தார். மிகவும் செல்லமாக அவர் அதனை வளர்த்தார். அவர் என்ன செய்வார் தெரியுமா? இரவு நேரத்தில் அந்தப் பூனையின் தலையில் ஒரு விளக்கை வைத்துவிடுவார். அந்தப் பூனை மிகவும் ஜாக்கிரதையாக அந்த விளககுக கீழே விழுந்து விடாமல் பார்த்துக் கொளளும்.

தலையை ஆட்டாமல் மிகவும் நிதானமாக ராஜாவின் பின்னால் நடந்து போகும். ராஜா அந்த விளக்கின் வெளிச்சத்தில் எல்லா வேலைகளை யும் செய்து விடுவார். கையில் ஒரு விளக்கைத் தனியாக எடுத்துக்கொண்டுபோக வேண்டிய அவசியம் அவருக்கில்லை. விளக்கைத் தூக்கிக் கொணடு போகும் வேலையை அந்தப் பூனை பார்த்துக்கொள்ளும். அதனால் ராஜாவுக்கு அந்தப் பூனை மீது மிகவும் பிரியம்.

மந்திரிகளை அழைத்து அவர்களிடம் சொல்வார் "பார்த்தீர்களா... இந்தப் பூனை எவ்வளவு விசுசாவமாக நடந்து கொள்கிறது. என் மீது அதற்கு எவ்வளவு மரியாதை பார்த்தீர்களா?" என்பார். இதைக்கேட்ட அமைச்சர்களில் ஒருவர் சொன்னார். "மன்னா நீங்கள் சொல்வது சரி தான். இருந்தாலும அந்தப் பூனையின் விசுவாசத்தைக் கொஞ்சம் சோதிததுப் பார்க்க ஆசைப்படுகிறேன்" என்றார். "சரி உங்கள் ஆசையை ஏன் கெடுக்க வேண்டும்? நன்றாக சோதித்துப் பாருங்கள்" என்று கூறிவிட்டார் ராஜா.

உடனே அநத அமைச்சர் என்ன செய்தார் தெரியுமா? எங்கேயோ புறப்பட்டுப் போனார். ஒரு ஐந்தாறு எலிகளைப் பிடித்துக் கொண்டுவந்தார். அரண்மனையில் ராஜா ஏதோ வேலைசெய்து கொண்டிருந்தார். பக்கத்தில் அந்தப் பூனை மிகவும் பணிவாக நின்று கொண்டிருந்தது. அதன் தலையில் விளக்கு எரிந்துகொண்டிருந்தது.

அமைச்சர் தான் பிடித்துக் கொண்டு வந்த எலிகளை அந்தப் பூனையின் பார்வையில் படக் கூடியவாறு எதிரில் விட்டார். அந்த எலிகள் அங்கும் இங்கும் ஓட ஆரம்பித்தது. அந்தப் பூனை இதனைப் பார்த்தது. அவ்வளவு தான்...! தலையில் இருக்கின்ற விளக்கைப் பற்றியும் கவலைப்படவில்லை. ராஜாவைப் பற்றியும் கவலைப்படவில் லை. ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து எலிகளைத் துரத்த ஆரம்பித்துவிட்டது. தலையில் இருந்த விளக்கு எங்கேயோ போய் விழுந்து அணைந்து விட்டது.

அந்த ராஜா இருட்டில் தடுமாற ஆரம்பித்துவிட் டார். இந்த சமயத்தில் அந்த அமைச்சர் மறுபடி யும் விளக்கை ஏற்றினார். வெளிச்சம் வந்தது அதன பிறகு அந்த மந்திரி பேச ஆரம்பித்தார். "அரசே... பூனையின் விசுவாசத்தைப் பார்த்தீர்களா? எலி அதன் கண்ணில் படும்வரைக்கும் தான் விசுவாசமாக இருப்பது போல் இருந்தது. எலியைப் பார்த்ததும் எல்லாவற்றையும் விட்டு விட்டு அதனைத் துரத்த ஆரம்பித்துவிட்டது" என்றார். அதன் பின்பு தான் அந்த ராஜாவுக்கு தனது தவறு புரிய ஆரம்பித்தது.

சரி... இப்போது எதற்கு இந்தக்கதை என்று யோசிக்கிறீர்களா? இந்தப் பூனை போலத்தான் நமது மனமும் மனதை எவ்வளவு தான் பயிற்சி கொடுத்துப் பக்குவமாக வைத்திருந்தாலும் பார்ப்பதற்குப் பரம சாது போல் தான் இருக்கும். பார்க்க வேண்டியதைப் பார்த்தால் பாய்ந்து விடும் இந்தப் பூனை மாதிரி.

புலனின்பப் பொருட்கள் கிட்டாத வரைக்கும் மனம் அடங்கியிருப்பது போலத்தான் தெரியும். கொஞ்சம் வாய்ப்புக் கிடைத்தாலும் அது குதித்துக் கூத்தாடும். பெரிய பெரிய முனிவர்களின் வாழ்க்கையில் நடந்த வீழ்ச்சி இதையே நிரூபிக்கின்றது. புலன்களின் ஆற்றல் அதிகம் அதனால் மனக்கட்டுப்பாட்டுப் பயிற்சிகளில் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். மதுப்பழக்கத்தையே விட்டு விட்டேன் என்று உறுதியாக இருப்பர் சிலர் கடைகண்ணில் பட்டுவிட்டாலோ கால் அவனைக் கேட்காமலே உள்ளே இழுத்துக்கொண்டுபோய் விடும் இது தான் மனது என்பது. இது அந்த ராஜா வளர்த்த பூனை.

நமது ஆள் ஒருவர் அந்த ராஜா பூனையின் த்லையில் வளக்கை வைத்தது போல் இவன் தனது தலையில் ஒரு விள்க்கை ஏற்றிவைத்துக் கொண்டு எதையோ தேடிக்கொண்டிருந்தான். தலையை ஆட்டாமல நிதானமாக நடந்து நீண்டநேரம் எதை யோ தேடிக்கொண்டிருந்தான்.

அந்த சமயம் அங்கே வந்த ஒருவர் "என்ன தேடுகின்றீர்கள்?" என்று கேட்டார். "அது தான் மறந்து போய் விட்டது..." என்று இழுத்தான். "சரி கொஞ்சம் இப்படி உட்காருங்கள் ஞாபகம் வந்ததும் மீண்டும தேட ஆரம்பிக்கலாம்" என்றார் அவர்.

இவன் கொஞ்சநேரம் உட்கார்ந்து யோசித்து விட்டுத் திடீரென்று எழுந்தான். "ஞாபகம் வந்து விட்டது" என்றான். "என்ன?" என்று கேட்டார் இவர். "எங்கள வீட்டில் இருந்த விளக்கை எங்கே வைததேன் என்று தெரியவில்லை அதைத்தான் தேடிக் கொண்டிருக்கிறேன். அதை ஏற்றி வைக் கலாம் என்று பார்க்கிறேன்" என்றான் இவன்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# மட்டு.சூட்டுச் சம்பவங்கள் குறித்து சந்தேகமெழுப்புகிறார் ஊடக ஆய்வாளர்

(கொழும்பு)

மடடக்களப்பு காயங்கேணிப் பகுதியில் அண்மையில் நடைபெற்ற இரு கொலைச் சம்பவங்களும் அரச புலனாய்வுத்துறை சார்ந்த குழுக்களின் உள் வேலையாக இருக்கலாம் என கொழும்பு பிரபல ஆங்கில ஊடகமொன்றின் பெரும்பான்மை இன ஆய்வாளர் ஒருவா சந்தேகம் எழுப்பியுள்ளார்.

காயங்கேணியில் இடம்பெற்ற கிளைமோர் தாக்குதலில் இரு விடுதலைப்புலிகள் கொல்லப்பட்ட சம்பவத்திறகு மறுதினம் அப்பகுதியில் இராணுவத்தினர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் இரு படையினர் காயமடைந்திருந்தனர்.

அதேபோன்று கடந்த 23ஆம் திகதி நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவமொன்றிலும் மற்றொரு படைச் சிப்பாய் காயமடைந்தார்.

இந்த இரண்டு சம்பவங்களும் காயங்கேணி படை முகாமிறகு அண்மித்த பகுதிகளிலேயே நடைபெற்றுள்ளன.

மட்டக்களப்பில் எல்லைப்புறமாகவுள்ள இராணுவத்தினரின் இரு முகாம்களுக்கு இடையில் வைத்து விடுதலைப்புலிகள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் படைத்தரப்பினரின் பங்கு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் இச்சம்பவத்தினால் தமக்கு ஏற்பட்டிருக்கும் அபகீர்த்தியைச் சரிசெய்யும் வகையில் எதிர்த் தாக்குதல்களும் நடாத்தப்பட்டுள்ளன.

இந்தப் பகுதி பாதுகாப்பற்ற பகுதி என்பதாலும் காட்டுமுகாம் என்பதாலும் இந்த இரண்டு கண்துடைப்பு தாக்குதல்களும் நடைபெற்றிருக்கலாம்.

விடுதலைப்புலிகள் மீதான தாக்குதலில் தமது பங்கு உறுதிப்படுத்தப்பட்ட நிலையில் அதனை இல்லாது செய்யும் முகமாக இவ்வாறு நடாத்தப்படும் தாக்குதல்களில், படைத்தரப்பின் புலனாய்வுத் தரப்பும்,முதல்நிலை அதிகாரிகளும் இணைந்தே செயற்படுகின்ற வாய்ப்புக்கள் உள்ளன.

இதுபற்றிய விபரங்கள் கீழ்நிலை அதிகாரிகளுக்கோ,படைச்சிப்பாய்களுக்கோ தெரியவருகின்ற சாததியமில்லை. இத்தகைய நடவடிக்கைகள் மூலம் இந்தப் பகுதியைத் தமிழ் ஆயுதக் குழுக்கள் பற்றி விடுதலைப்புலிகள் ஆகியோரின் நடமாட்டமுள்ள பகுதி போன்று காட்டுவதோடு படையினர் மீதான இந்த மிரட்டல் தாக்குதல்களின் மூலம் கீழ்நிலை அதிகாரிகளையும், சாதாரண சிப்பாய்களையும் விடுதலைப புலிகளுக்கு எதிரான போக்கிற்கு நிரந்தரமாக மாற்றும் தந்திரோபாயமாகவே காணப்படுவதாக அந்த ஆய்வாளர் மேலும் கருத்து வெளியிட்டுள்ளார். (ற-121)

# படுகொலைச் சம்பவங்களைக் கண்டித்து அரசாங்கம் அறிக்கை வெளியீடு

(கொழும்பு)

கிழக்கு மாகாணம் மற்றும் கொழும்பு ஆகிய பகுதிகளில் அண்மைக்காலமாக இடம்பெற்று வரும் படுகொலைச் சம்பவங்களை வன்மையாகக் கண்டித்து அரசாங்கம் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

அரசாங்கத் தகவல் திணைக்களம் வெளியிடடுள்ள மேற்படி அறிகையில், இக் கொலைகளும் கட்டாய ஆட்சேர்ப்பு மற்றும் ஆட்கடத்தல் உள்ளிட்ட சிறுவர்களை படையில் சேர்த்தல் போன்ற வன்முறைகள் யுத்த நிறுத்தத்திற்குப் பாரிய அச்சுறுத்தல்களை ஏற்படுத்தியுள்ளன.

அதேவேளை, சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதிலும் இச்சம்பவங்கள் பாரிய் சிக்கல்களை உருவாக்கியுள்ளன.

தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வரும் இவ்வாறான வன்முறைகள் சர்வதேச மனித உரிமைகள் அமைப்பினால் உருவாக்கப்பட்ட விதிகளை மீறியுள்ளது.

மேற்படி கொலைச் சம்பவங்கள் தொடர்பாக உரிய விசாரனைகளை மேற்கொள்ள அரசாங்கம் நடவடிக்கைகளை எடுத்துள்ளதுடன நாட்டில் கடும் சட்டத்தை நிலை நாட்டவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற-8)

# இராசி பலன்

26.08.2004 *(ஆவணி 10, வியாழக்கிழமை)*

ஏகாதசி பி.ப 5.14 மணிவரை

பூராடம் பி.இ. 2.18 மணிவரை

இராகுகாலம் 01.35 - 3.05 மணிவரை

சுபநேரம் 7.35 - 9.05 மணிவரை

ஏகாதசி விரதம்

**மேடம்**
எதிர்பாராத் செலவு, காரிய தாமதம், கட்டுப்பாடு, தொழில் சிந்தை.

**இடபம்**
பிரயாண பயம், காரிய தடங்கல், நண்பர்கள் வெறுப்பு, போசன சுகம்.

**மிதுனம்**
சௌக்கிய விருத்தி, தொழில் வருமானம், கீர்த்தி, முயற்சி கைகூடும்.

**கடகம்**
போசன சுகம், சத்துரு ஜெயம், காரிய சித்தி, வாகன சுகம்.

**சிங்கம்**
மனச் சோர்வு, காரிய தாமதம், தொழில் சிந்தை, அமைதிக் குறைவு.

**கன்னி**
ரோக பயம், உடல் நலக் குறைவு, உறவினர் வெறுப்பு, சிந்தனை மிகுதி.

**துலாம்**
சகோதர உதவி, தொழில் நன்மை, உற்சாகம், பெரியோர் சந்திப்பு.

**விருச்சிகம்**
உடல் நலக் குறைவு, கோபப்படுதல், வேலைச் சுமை, காரிய தாமதம்.

**தனுசு**
சயன சுகம், தெய்வ தரிசனம், நண்பர்கள் சந்திப்பு, காரிய சித்தி.

**மகரம்**
மனக் கிலேசம், சுரவியாதி, தனவிரயம், காரிய தாமதம்.

**கும்பம்**
நல்ல செய்தி, மனமகிழ்ச்சி, செல்வாக்கு குடும்ப சுகம்.

**மீனம்**
அதிக பிரயாசை, நிலை மாற்றம், நல்ல வரவேற்பு, எடுத்த கருமங்கள் கைகூடும்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)'

**வளவன்**

# எம்மீது போர் திணிக்கப்பட்டால் அதனை எதிர்கொள்ளத் தயாராகவுள்ளோம்

## சாள்ஸ் அன்ரனி படையணித்தளபதி தெரிவிப்பு

(கிளிநொச்சி)

ஆட்சி, அதிகாரங்களில் உள்ள தென்னிலங்கை அரசியல்வாதிகள், தமிழீழ விடுதலைப்புலிகள் பலவனமடைந்து விட்டார்கள் என எண்ணினால் அது எங்களுக்கு மகிழ்ச்சியைத் தரக்கூடிய விடயமாகுமென சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் தளபதி லெப்.கேணல் நகுலன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கிளிநொச்சி கலை பண்பாட்டுக்கழகத்தில் இடம்பெற்ற "தாய் மடியில் தாலாட்டு" ஒலிப்பேழை அறிமுகவிழாவில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

இவ்விடயம் எங்களின் விடிவிற்காக அரசாங்கம் போட்டுத் தருகின்ற அத்திவாரமாகவும் படிக்கல்லாகவும் அமையும் என்பதில் எந்தவித ஐயமும் இல்லை.

எங்கள் மீது அரசாங்கம் யுத்தத்தைத் திணித்தால் நிச்சயமாக அதை எதிர்கொண்டு எமது தேசத்தை மீட்டெடுப்பதற்கு எங்களுடைய மக்களும்,எங்களுடை போராளிகளும் என்றுமே உறுதியாக இருக்கின்றார்கள்.

ஆகவே இந்த விடுதலைப் போராட்டத்தின் இறுதி வெற்றியானது எங்கள் ஒவ்வொருவரிலும் தங்கியுள்ளது.

எம் இனத்தின் மீது திணிக்கப்படும் போரை எதிர்கொள்வதற்கு நாங்கள் எப்போதுமே தயாராக இருக்க வேண்டும்.

கிளிநொச்சி நகரமானது மாவீரர்களினதும் பல நூற்றுக்கும் மேற்பட்ட எல்லைப்படை மாவீரர்களினதும் குருதியினாலும், தியாகத்தினாலும் விடுதலை பெற்று இன்று மெல்ல மெல்ல உருப்பெற்று வருகின்றது எனத் தெரிவித்தார். (ற-121)

# சூட்டுச் சம்பவத்தில் காயமடைந்த சிறைக் காவலர் உயிரிழப்பு

(கொழும்பு)

அக்கரைப்பற்று நீதிமன்றில் நேற்று முன்தினம் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச்சம்பவத்தில் காயமடைந்த சிறைச்சாலைக் காவலர் நேற்று முன்தினம் இரவு உயிரிழந்துள்ளார்.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட ஆரையம்பதியைச் சேர்ந்த கே.சிவகுமார் வயது(49) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

அக்கரைப்பற்று நீதிமன்றத்திற்கு நேற்று முன்தினம விசாரணைக்காக அழைத்துவரப்பட்ட கருணா குழுவைச் சேர்ந்த பி.ஜெயக்குமார் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தின் போதே மேற்படி சிறைச்சாலைக் காவலர் காயமடைந்தார்.

இச்சம்பவத்தில் காயமடைந்த மற்றொருவரான நீதிமன்றக் கட்டளைச் சேவகர் மட்டக்களப்பு வைத்தியசாலையில் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றார்.

நீதிமன்ற விசாரணைகள் நடைபெற்றுக் கொண்டிருந்த போது இடம்பெற்ற இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் சந்தேக நபரான பி.ஜெயக்குமார் அந்த இடத்திலேயே உயிரிழந்தமை தெரிந்ததே. (ற-க,61)

# மட்டு.நிலைமைகள் குறித்து ஜப்பானியத் தூதுவர் ஆராய்வு

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஜப்பானிய அரசாங்கம் மேற்கொணடுவரும் அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் தொடர்பாக ஆராய்வதே தமது விஜயத்தின் நோக்கமாகும் என மட்டக்களப்புக்கு விஜயம் செய்த இலங்கைக்கான ஜப்பானியத் தூதுவர் ஐக்கியோ சூடா தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் மட்டக்களப்பிலுள்ள 233 ஆவது படைத்தலைமை அலுவலகத்தில் படையதிகாரிகளைச் சந்தித்து உரையாடிய பின னர் கருத்துத் தெரிவிக்கையி லேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதியில் அண்மைக்காலமாக இடம்பெற்றுவரும் படுகொலைச் சம்பவங்கள் தொடர்பாகவும் இவ்வாறான கொலைகளைக் கட்டுப்படுத்த மேற்கொண்டுள்ள பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பாகவும் படையதிகாரிகளுடன் கலந்துரையாடினார்.கொலைகளைக் கட்டுப்படுத்துவதற்கு படையினர் நடவடிக்கைகள் மேற்கொண்டு வருவதாக படையதிகாரிகள் உறுதியளித்ததாக ஜப்பானியத் தூதுவர் தெரிவித்தார்.

இச்சந்திப்பில்,23 ஆவது படையணித் தளபதி பிரிகேடியர் வஜிர குணவர்த்தன, 233 ஆவது படையணித் தளபதி ஆகியோரும் கலந்து கொண்டனர். படையதிகாரிகளைச் சந்தித்த பின்னர்,யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழு அலுவலகத்தில் மட்டக்களப்பு அரச அதிபர் எஸ். சண்முகம் உள்ளிட்ட பிரமுகர்களைச் சந்தித்தும் அபிவிருத்தி நடவடிக்கைகள் குறித்து இவர் கலந்துரையுள்ளார். (ற-8)

# மட்டு.அம்பாறையில் விசேட பாதுகாப்பு தீவிரம்

(மட்டக்களப்பு)

கிழக்கில் அண்மையில் இடம்பெறும் சம்பவங்களையடுத்து, மட்டக்களப்பிலும் அம்பாறையிலும் விசேட பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பவுள்ளதாக விசேட அதிரடிப் படையினர் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக நேற்று முன்தினம் அம்பாறையில் நடைபெற்ற கூட்டத்தில் விசேட அதிரடிப் படையினர். இந்தத் தீர்மானத்தை நிறை வேற்றியுள்ளனர்.

தற்போதுள்ள பாதுகாப்புத் திட்டத்தில் பல மாற்றங்கள் செய்யப்பட்டவுள்ளன.அதேவேளை இந்தப் பகுதிகளில் தற்போதுள்ள நிலைமைகளைக் கருத்தில் கொண்டே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

விடுதலைப் புலிகளினால் கிழக்குப் பகுதி மக்களுக்கு அச்சுறுத்தல ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும், இதனால் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் பொறுப்பை விசேட அதிரடிப் படையினர் கொணடுள்ளதாகவும் விசேட அதிரடிப்படையினர் தெரிவித்துள்ளனர். (இ-8)

# சமய நிகழ்ச்சிகள்

## சங்காபிஷேகம்

(அராலி)

அராலி ஆகாயக் குளம் விநாயகர் ஆலயத்தில் எதிர்வரும் 28 ஆம் திகதி சனிக்கிழமை மகா சங்காபிஷேகம் நடைபெறவுள்ளது. (க-7,150)

## அலங்கார உற்சவம்

(பொன்னாலை)

கரம்பொன் மேற்கு பருத்தியடைப்பு,ஊர்காவற்றுறை மேலைக் கரம்பொன் தேவன் கணைப் பிள்ளையார் ஆலய வருடாந்த அலங்காரத் திருவிழா நேற்றமுன்தினம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

எதிர்வரும் 2ஆம்திகதி காலை கண்ணகை அம்மன் கோவில் தீர்த்தக் கரையில் தீர்த்த தோற்சவம் நடைபெற்று 108 சங்குகளைக் கொண்ட நவோத்தர சத சங்காபிஷேகம் நடைபெறவுள்ளது.அன்று இரவு சுவாமி முத்துச் சப்பறத்தில் வீதியுலா வரும் காட்சியும் இடம் பெறவுள்ளது. (க-49)

## இரதோற்சவம்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானத்தின் இரதோற்சவம் நாளை வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளது.

அத்துடன், நாளை மறுதினம் சனிக்கிழமை தீர்தோற்சவமும் இடம் பெறவுள்ளது. (ற-8)

# இலங்கைக்கு உதவி வழங்குவது குறித்து உலகவங்கி,ஆசிய அபிவிருத்திவங்கி அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தை

(கொழும்பு)

இலங்கைக்கு உதவி வழங்குவது தொடர்பில் உலகவங்கி மற்றும் ஆசிய அபிவிருத்திவங்கி ஆகியன உள்ளிட்ட ஏனைய முக்கிய அமைப்புக்களின் பிரதிநிதிகள் விரைவில் அமெரிக்க அரசுடன் முக்கிய பேச்சுவார்த்தை ஒன்றை நடாத்தவுள்ளனர்.

இமமாநாடு எதிாவரும் ஒக்டோபர் மாத ஆரம்பத்தில் இடம்பெறும் என உலகவங்கி அறிவித்துள்ளது.

சமாதான முயற்சிகளில் தற்போது ஏற்பட்டுள்ள இழுபறி நிலை காரணமாக இலங்கைக்கு வழங்குவதற்கு தீமானிக்கப்பட்டிருந்த நிதியுதவிகள் முடக்கப்பட்டுள்ளதாகவும் உலகவங்கி சுட்டிக் காட்டியுள்ளது.

எனவே,இப்பிரதிநிதிகளுக்கிடையலான சந்திப்பின்போது இந்த நிதியை எந்தத் தேவைக்குப் பயன்படுத்துவது என்பது குறித்து விரிவாக ஆராயப்படஎள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது ஆட்சிப் பொறுப்பில் உள்ள ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு நாட்டை 'முன்னேற்றுவோம் 'எனும் புதிய திட்டமொன்றை அறிமுகப்படுத்தியுள்ளது.

இந்நிலையில்,இதனை நடைமுறைப்படுத்த முடியாது என உலக வங்கி விமர்சித்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.(ற-க-121)

## போயா தின நிகழ்வுகள்

யாழ்.பகவான் ஸ்ரீசத்திய சாயி சேவா நிலையத்தில் எதிர்வரும் 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை போயாதின ஆன்மீக நிகழ்ச்சிகள் அதிகாலை 5.00 மணிக்கு நகர சங்கீர்த்தனத்துடன் ஆரம்பமாகி நண்பகல் நாராயண சேவையுடன் நிறைவு பெறும்.

அன்று வைத்திய கலாநிதி ஆர்.கணேசமூர்த்தியின் சிறப்புச் சொற்பொழிவும் இடம் பெறவுள்ளது. (ற)

# சாரதிகளுக்கு ஒரே தினத்தில் அனுமதிப் பத்திரம்!

(கொழும்பு)

ஒரே தினத்தில் சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கும் திட்டம் வெற்றியளித்துள்ளதாக மோட்டார் போக்குவரத்து திணைக்கள ஆணையாளர் டி.விஜயரட்ண தெரிவித்தார்.

தற்போது காணாமல் போன சாரதி அனுமதிப் பத்திரங்களைப் பெறுவதற்காக விண்ணப்பித்தோருக்கு நாளொன்றிற்கு சுமார் 50 அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்படுகின்றன.

இத்திட்டத்தின் கீழ்,1999 ஆம் ஆண்டுக்குப் பின்னர் வழங்கப்பட்ட சாரதி அனுமதிப் பத்திரம் ஒன்று காணாமல் போனால்,அதற்குப் பதிலாக புதிய அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்படவுள்ளன.

எனவே, தேவையானவர்கள் ஆயிரம் ரூபா பணததைச் செலுத்தி தமக்கான சாரதி அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-ப)

# ஜெயலலிதாவின் வருமான விவகாரம்

# கர்நாடகாவில் வழக்கைநடத்த பிரதிவாதிகள் தரப்பு எதிர்ப்பு

(புதுடில்லி)



தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா வருமானத்துக்கு அதிகமாகச் சொத்துச் சேர்த்தார் என்பது குறித்த வழக்கினை கர்நாடகாவில் நடத்தவேண் டாம் என்று எதிர் மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஜெயலலிதாவின் வழக்கறிஞர்கள் புதுடில்லி உச்ச நீதிமன்றத்தில் இந்த எதிர் மனுவினைத் தாக்கல் செய்திருந்தனர்.

தமிழக முதலவர் ஜெயா மீதான வழக்கு ஆவணங்களை கர்நாடகாவிற்கு இந்த வாரத்துக்குள் அனுப்பும் படி உ்ச்ச நீதிமன்றம் உத்தரவிட்டதையடுத்தே, இந்த மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது; ஜெயலலிதா தனக்கு கர்நாடகத்தில் எதிர்ப்பு வலுக்கிறதென்றும் அங்கு வழக்கறிஞர்கள் சென்ற வாதாடினால் பதட்டம் ஏற்படும் என்றும் வேறு மாநிலத்துக்கு மாற்ற வேண்டும் என்றும் அம் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை வழக்கு ஆவணங்களை கர்நாடகாவிற்கு அனுப்புவதையும் தடைசெய்யும் படி கேட்கப்பட்டுள்ளது. (து)

# இந்தியச் செய்திகள்

# காங்கிரஸை சாடுகிறார் முன்னாள் முதல்வர் உமாபாரதி

மத்திய பிரதேச முன்னாள் முதலமைச்சரும் பாரதிய ஜனதாக் கட்சித் தலைவருமான செல்வி உமாபாரதி காங்கிரஸையும் இடதுசாரிக் கட்சிகளையும் கடுமையாகச் சாடியிருக்கிறார்.

இரண்டு கட்சிகளும் தனக்குச் செய்தவை பழிவாங்கும் தொடரேயென்றும் மக்கள் இதனை நன்கு உணரவேண்டும் என்று கூறியிருக்கிறார்.

கட்சித் தொண்டர்களிடையே பேசுகையில், தேசியக் கொடியை அகற்றிக் கொண்டு சுயமரியாதைக்காகப் போராடிய அனைவரது செயல்களையும் அவ்விரு கட்சிகளும் சீர்குலைத்து விட்டன என்றும் தெரிவித்தார். (து)

# முகம்மது அலியின் 3ஆவது பிணை மனுவும் நிராகரிப்பு

30ஆயிரம் கோடி ரூபா முத்திரைத் தாள் மோசடியில் கைது செய்யப்பட்டுள்ள டி.ஜி.ஜி. முகம்மது அலியின் மூன்றாவது பிணை மனுவையும் சென்னை நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

இந்த மோசடியில் கைதான முகம்மது அலி,தன்னை பிணையில் வெளியில்விடக் கோரி சென்னை எழும்பூர் பெருநகரக் குற்றவியல் நீதிமன்றத்தில் இரு முறை மனுத்தாக்கல் செய்த போதிலும் இருமுறையும் அவரது மனு தள்ளுபடி செய்யப் பட்டது.

இதையடுத்து, முதலாவது கூடுதல் நீதிமன்றத்தில் முகம்மது அலி மூன்றாவது முறையாக மனுதாக்கல் செய்தார்.அவரை பிணையில் விடுதலை செய்ய சி.பி.ஐ.கடும் எதிர்ப்புத் தெரிவித்தது.

இந்த வழக்கில் பிரதான குற்றவாளி அப்துல் கரீம் டெல்கியும் அவரது கூட்டாளிகளான நிஜாமுதீன், பாலாஜி உளளிட்டோரும் போலி முத்திரைத் தாள் விற்பனை செய்வதற்கு முகம்மது அலி வசதி செய்து கொடுத்தார் என்றும், இதற்காகப் பெருந் தொகைப் பணம் பெற்றுக் கொண்டார் என்றும் சி.பி.ஐ. குற்றஞ்சாட்டியிருப்பதற்கு அடிப்படை ஆதாரங்கள் இருப்பதாக வழக்கை விசாரித்த நீதிபதி தேவராஜ் கூறினார்.

சி.பி.டி.ஐ.ஜி.பிரிவில் உயர் அதிகாரியாக இருக்கும் முகம்மது அலியை பிணையில் விடுதலை செய்தால் அப்பிரிவில் அவருக்குக் கீழ் பணியாற்றும் அதிகாரிகள் அவருக் கெதிராக அளித்த சாட்சியத்தை அவர் கலைத்து விடக் கூடுமென்றும் ,நீதிபதி முகம் மது அலியின் பிணை மனுவைத் தள்ளுபடி செய்வதாக உத்தர விட்டார். (து)

# தாம்பத்தியம் வேண்டி பிணைமனு கோரினார்

இந்தியாவில் மதக்கல வரங்கள் தொடர்பாக சிறையில் வைக்கப்பட்ட ஒருவர் தாம்பத்திய உறவுக்காகத் தன்னை பிணையில் விடுமாறு கோரியுள்ளார்.

பிரஸ்கால் என்ற இந்த நபர் தனது மனைவியுடன் தாம்பத்திய உறவு கொள்ள வேண்டும் என்றும் தமது மதக்கோட்பாட்டின் படி பிறருடன் தாம்பத்தியம் கொள்வது தவிர்க்கப்பட்டதென்று பிணைமனுவில் கோரியுள்ளார்.

30 மாத காலம் சிறையில் இருப்பதால் தாம்பத்தியமின்றி, மன உளச்சலினால் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் மனிதநேய அடிப்படையில் ஒரு மாதகால பிணை தரும்படி பிரஸ்கால் கேட்டுள்ளார்.இந்த விநோதமான பிணைக் கோரிக்கையினால் குழப்பமடைந்துள்ள அரச வழக்கறிஞர்கள்,பிணைபற்றி ஆராய்வதற்காக மனுமீதான விசாரணையைத் தள்ளி போட்டுள்ளனர். (து)

# கோவையில் முப்பெரும் விழா

தன்மான இயக்கத்தின் பிதாமகன், பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் பிறந்த நாள்,பேரறிஞர் அண்ணா பிறந்த நாள்,தி.மு.க. உதயமான நாள் ஆகியவற்றை இணைத்து ஆண்டு தோறும் முப்பெரும் விழாவாகக் கொண்டாடப்படுகிறது.

இந்த ஆண்டுக்கான முப்பெரும விழா வரும் செப்டெம்பர் மாதம் 15 ஆம திகதி கோவையில் கொண்டாடப்படுமென தி.மு.க. தலைமைக் கழகம் அறிவித்துள்ளது.

முப் பெரும் விழாவையொட்டி வழங்கப்படும் பெரியார் விருது, விருதுநகர் கே.வி.எஸ். பாண்டி 'யனுக்கும் அண்ணாவிருது குமரப் பாளையம் ஏ.கே.எஸ் ஆ தாத்துக்கும் கலைஞர் விருது தஞ்சை சுல்தானுக்கும், புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் விருது அந்தமான் மருதவாணனுக்கும் வழங்கப்படுவதாகவும் தி.மு.க. தலைமை கூறியுள்ளது. (து)

# சமூக, கலாசார பிறழ்வுக்கு காரணமானவர்கள் யார்?

சமூக, கலாசாரப் பிறழ்வுக்குக் காரணமாக அமைப வர்கள் இக்கால இளைஞர்களா, இளம் பெண்களா என்பது சம்பந்தமான ஒன்பது கட்டுரைகள்' வலம்புரி' யில் வெளிவந்துள்ளன.

நீர்வைமணி, எஸ். சிவராஜன், ஜி.ஜெஸ்ரின், செ.ஹேமலதா ஆகியோரின் சுட்டு விரல்கள் இளம் பெண்களைக் காட்டி நிற்கின்றன. தமிழ் உதயம், நீர்வையூரான், பிரம்மசாத்வி, எஸ்.ரி.பரன் ஆகியோர் இளைஞர் களைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்துகின்றனர். க. கனகராசா இருபாலாரிலுமே குற்றம் காண்கிறார்.

உலகிலே மிகப் பழங்காலத்திலிருந்தே தமிழ்ப் பெண் களுக்குத் தனித்துவமான பெருமையும் மதிப்பும்

**விவாத அரங்கிற்கு தனது தீர்ப்பை வழங்குகிறார் நடுவர் (சிற்பி) சிவ.சரவணபவன் (முன்னாள் யா/ வைத் தீஸ்வராக் கல்லூரி அதிபர்)**

இருந்து வருவதைக் குறிப்பிடும் நீர்வை மணி, அந் நிய நாகரிக, கலாசார மோகத்தில் மூழ்கியுள்ள இக் கால இளம் பெண்கள், தம் நடை, உடை பாவனை களால் தமிழ்ப் பெண்மையைக் கீழ்மைப்படுத்து வதாகக் கூறுகின்றார். பெண்களின் அரைகுறை அலங் கோல உடை பற்றிக் கண்டிக்கும் எஸ்.சிவராஜன், பெண்களின் வாலிபத் தோழர் உறவு (**Boy Friend**), தொலைக் காட்சி நாடகங்களைப் பார்ப்பதன் விளை வாக கடமைப் புறக்கணிப்பு போன்றவற்றால் ஏற்படும் கலாசாரச் சீரழிவுகளையும் விபரிக்கின்றார். நீதி மன்று களில் விவாகரத்துக் கோரும் பெண்களையும் அவர் சாடுகின்றார். நவ நாகரிக உடையணிந்து வரும் பெண் களினால், முதியவர்களாற் கூட கலாசாரத்தைப் பின் பற்ற முடியவில்லையே என்கின்றார் ஜி.ஜெஸ்ரின். இக்கால ஆண்களைத் தம் வலைக்குட் சிக்க வைக்க முயலுதல், தொலைக்காட்சி நாடகங்கள் காரணமாகத் தம் வீட்டுக் கடமைகளைப் புறக்கணித்தல்- இவை பெண் களுக்கு எதிராக முன் வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள்.

புகை பிடித்தல், போதைவஸ்துவுக்கு அடிமையாதல், பெண்களைப் பலாத்காரம் செய்தல், கோஷ்டி சேர்த்துக் கொணடு வன்செயல்களில் ஈடுபடுதல், திருடுதல்; படித்த வர்கள், முதியோர், பெண்கள் போன்றோர் சுதந்திர மாக வீதிகளில் நடமாடமுடியாதபடி அவர்களை நையாண்டி செய்தல், அச்சுறுத்தல், அதிக சீதனம் கேட் பதன் மூலம் புதிய பல பிரச்சினைகளை உருவாக் குதல் -முதலானவை இளைஞர்களுக்கு எதிராகத் தெரிவிக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள்.

இவற்றிலிருந்து, கலாசாரப் பிறழ்வுக்கு இக்கால இளைஞர்களே காரணம் என்ற முடிவுக்கே வரவேண்டி யுள்ளது. ஆனால்,இந்த விவாதத்தின் நோக்கம், யார் குற்றவாளிகள் என்பதை அறிந்து கொள்வது மட்டுமே என்பதன்று. கல்விமான்கள் , சமயப் பெரியார்கள், புத்தி ஜீவிகள், சமூகத் தலைவர்கள் போன்ற பலரின் கவலை யையும், எங்கள் சமுதாயத்தின் எதிர்காலம் என்ன ஆகுமோ என்ற ஏக்கத்தையும் ஏற்படுத்திக் கொண்டி ருக்கும் இப் பிரச்சினை மீது எல்லோருடைய கவனத்தை ஈர்ப்பதும்,ஆக்கபூர்வமான சில சிந்தனைகளை உரு வாக்குவதுமே "வலம்புரி" ஆசிரியர் பீடத்தினதும் நிர் வாகிகளினதும் நோக்கம் என நான் கருதுகின்றேன்.

விவாதத்திற் கலந்து கொண்ட யாருமே கலாசாரம் என்பதற்குத் தெளிவான விளக்கத்தைக் கொடுக்க வில்லை. " கலாசாரம் என்பது தொன்றுதொட்டு எம்மு டன வரும் விடயம்" என்கின்றார் எஸ். சிவராஜன்."விடயம்" என்பதை அவர் தெளிவுபடுத்த வில்லை. " கலாசாரம் என்பது ஒரு இனத்தைத் தனித்து வமாகக் காட்டக் கூடியதொன்று. இதில் உடை, பழக்கவழக்கங்கள், வழி பாடுகள் போன்ற பலவிதமான செயற்பாடுகள் அடங் குகின்றன" என்ற செ. ஹேமலதாவின் விளக்கமும் பூரணமானதன்று.

**Culture** என்ற ஆங்கிலச் சொல்லை, கலாசாரம் என மொழி பெயர்த்தவர் இரசிகமணி டி.கே.சிதம் பரநாத முதலியார். இச்சொல் நடைமுறைக்கு வர முன்னர் பண்பு, சால்பு போன்ற சொற்களை அறி ஞர்கள் பயன்படுத்தினர். இவற்றை திருந்திய, நல்ல உயர்ந்த மனப்பாங்கு எனக் கொள்வது பொருத் தமானதாகும். ஆண்டாண்டு கால வாழ்க்கை அனுப வங்களின் அடிப்படையில் உருவாகிப் பொதுமைப் படுத்தப்பட்ட சிந்தனைகள், நம்பிக்கைகள், விழுமி யங்கள் போன்றவற்றின் சங்கமிப்பு விளைவிக்கும் உயர்ந்த மனப்பாங்கு இது. ஒரு சமுதாயத்தின் நடை, உடை பாவனைகளுக்கு இந்த மனப்பாங்கு அடிப்படையாக இருப்பதை, அவற்றில் பிரதிபலிப் பதை உணரலாம். "உயர்ந்த" என்பதற்கு ஒவ்வொரு சமுதாயமும் வெவ்வேறு அர்த்தங்களைக் கொடுக் கலாம். அந்த வேறுபாடுதான் நடை, உடை பாவனை களிலுள்ள வேறுபாட்டுக்குக் காரணம். **A cultured person** என்ற தொடர், உயர்ந்த மனப்பாங்குடைய ஒரு



நாடும் ஆண்களின் துரோகச் செயல் மன்னிக்கப்படக் கூடியதா என்றும் கேட்கின்றார்.

தொகுத்துப் பார்க்கும்போது இளம் பெண்களுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை விட, இளைஞர்களுக்கு எதிராகத் தெரிவிக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக் கள் எண்ணிக்கையிற் கூடியவை.

அரைகுறை ஆடைகளை அணிதல்,

ளிற் குறிப்பிடும் நாணம். இந்த நாணம் இப்போது இல் லாதபடியாலே தான் கலாசாரப் பிறழ்வுகள் பல நடை பெறுகின்றன. இப்போது வெளியாகும் அநேகமான தமிழ்த் திரைப்படங்கள் பல தொலைக்காட்சி நாடகங் கள் 'நமக்கேன் இந்த வம்பு' என சமூகத்திலுள்ள படித்தோர், பெரியோர் ஒதுங் கியிருக்கும் நிலை, தம் பிள்ளைகளிற் கவனம் செலுத்த முடியாத பெற்றோர்களின் அறியாமை, இளை ஞர்கள் மத்தியிலுள்ள அளவுக்கு மீறிய பணப் புழக்கம், பெண்ணியம் பற்றி அளவுக் கதிகமாக செய்யப்படும் பிரசாரம் போன்றவற்றால் வள்ளுவர் குறிப்பிடும் இந்த "நாணம்" வரண்டுவிட்டது.

இளம் பெண்களின் ஆடை அலங்காரம் மட்டுமல்ல, அவர்கள் மேற்கொள்ளும் சகல நடவடிக்கைகளுமே சமூகத்துக்கு ஒவ்வாதவை யாக இருக்கின்றன. யாரையும் எடுத்தெறிந்து பேசுகி றார்கள், பெரியவர்களை மதிப்பதில்லை, கடவுளிடம் பயமோ பக்தியோ கிடையாது- இவை செ.ஹேமலதா வின் குற்றச்சாட்டுக்கள்.

எடுத்ததற்கெல்லாம் பெண்களைக் குறை கூறிக் கொண்டு ஆண்கள் தப்பித்துக் கொள்ளப் பார்க்கின்ற னர் எனற பீடிகையுடன், இளைஞர்களின் தகாத செயல் களைப் பட்டியலிடுகின்றார் கொழும்புத்துறை தமிழ் உதயம். மதுக் கடைகளை நிரப்புபவர்கள், ஆபாசத் திரைப் படங்களுக்கு அடிமையாக இருப்பவர்கள், வீதி களில் நின்று வீண்வம்பு செய்பவர்கள் இளைஞர்களே

"**தீதும் நன்றும் பிறர் தர வாரா**" என்ற கணியன் பூங்குன்றனாரின் அனுபவ மொழி தமிழ்ப் பண்பாட்டின்

**சிவ. சரவணபவன் (சிற்பி)**

வெளிப்பாடு. "எங்கள் வீழ்ச்சிக்கு நாங்களே காரணம்; எங்கள் தோல்விக்கு நாங்களே காரணம், எங்களுடைய இன்றைய இழிநிலைக்கு, கலாசாரச் சிதைவுக்கு நாங்

உதயம். மதுக் கடைகளை நிரப்புபவர்கள், ஆபாசத் திரைப் படங்களுக்கு அடிமையாக இருப்பவர்கள், வீதிகளில் நின்று வீண்வம்பு செய்பவர்கள் இளைஞர்களே என்கின்றார் அவர். மேனாட்டு நாகரிகத்தைப் பெரிதாகக் கருதும் பெண்கள் சிலர் அரை குறை ஆடைகளை அணிவதை ஒப்புக்கொள்ளும் அவர், பெரும்பாலான பெண்கள் தமிழ்ப் பண்பாட்டுக்கு அமைய ஆடை அணிவது தெரியவில்லையா என்றும் கேட்கின்றார்.

சங்க காலம் தொடக்கம் இன்றைய 21ஆம் நூற்றாண்டு வரை எழுதப்பட்ட, எழுதப்படுகின்ற இலக்கியங்கள் எல்லாமே ஆண்களுக்கு ஒரு நீதி, பெண்களுக்கு ஒரு நீதி என்ற நிலையைத்தான் பிரதிபலிக்கின்றன. ஆண்கள் எதையுமே செய்யலாம், பெண்கள் மட்டும் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். ஆண்களுக்கு அளிக்கப்பட்டுள்ள இந்த உயர் இடம், தாம் நினைத்தபடி நடப்பதற்கு அவர்களைத் தூண்டுகின்றது. தம்மைத் தட்டிக் கேட்பதற்கு யார் இருக்கிறார்கள் என்ற அசட்டுத் துணிச்சலில் அவர்கள் செய்யும் அநியாயங்களை அடுக்குகின்றார் நீர்வையூரான். கள்ளச் சாராய உற்பத்தி, உபயோகம், கோஷ்டி மோதல், திடீர் விவாகரத்து என இப்படிப் பல.

போர்க்காலத்தில் மக்களிடம் நிலவிய அச்சத்தை விட அதிக அச்சத்துடன் மக்கள் இப்போது வாழ்வதைச் சுட்டிக்காட்டுகின்றார் பிரம்மசாத்வி.இந்த அச்சத்துக்குக் காரணமான இன்றைய இளைஞர்களின் செயல்களை- புகை பிடிப்பதை , போதை வஸ்துக்கு அடிமையாவதை , கணனி வலைப் பின்னலில் பார்க்கத் தகாதவற்றைப் பார்ப்பதை, வீதிகளிலே நின்று பெண்களுடன் விரசமாக நடக்க முயல்வதை- ஆக்ரோஷத்துடன் கண்டிக்கிறார் அவர். நீதிமன்றம் சென்று விவகாரத்துக் கோரும் பெண்களைக் குறைகூறிய எஸ். சிவராஜனைப் பார்த்து, கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருஷன் என்பதை வலியுறுத்தும் ஆண்கள் செய்யும் அட்டூழியங்களையும், அக்கிரமங்களையும் பார்த்துக் கொண்டும் கேட்டுக்கொண்டும் பெண்கள் பேசா மடந்தையாக இருப்பதனால் தமிழ்க் கலாசாரம் காப்பாற்றப்படுமா எனக் கேட்கின்றார். கட்டிய மனைவியையும் பெற்றெடுத்த பிள்ளைகளையும் நட்டாற்றில் விட்டுவிட்டு வேறு பெண்களை

சமுதாயமும் வெவ்வேறு அர்த்தங்களைக் கொடுக்கலாம். அந்த வேறுபாடுதான் நடை, உடை பாவனைகளிலுள்ள வேறுபாட்டுக்குக் காரணம். **A cultured person** என்ற தொடர், உயர்ந்த மனப்பாங்குடைய ஒருவர் என்பதைக் குறிக்கின்றது. அவருடைய உடையில், அவர் பேசும் சொற்களில், அவர் நடந்து கொள்ளும் முறையில அவருடைய உயர்ந்த மனப்பாங்கு நிச்சயம் பிரதிபலிக்கும். மனிதர் பலர் சேர்ந்தது தானே ஒரு சமுதாயம்? அந்த மக்களின் மனப்பாங்கு சமுதாயத்தின் நடை, உடை பாவனையில்,இலக்கியத்தில் பிரதிபலிக்கும்.

**'அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், -வாய்மையென**
**ஐந்து சால்பூன்றிய தூண்'**

என்பது வள்ளுவம்; தமிழ்ப் பண்பாட்டின் தீய செயல்களைச் செய்ய வெட்கப்படுதல், உலக ஒழுக்கத்தை உணர்ந்து நடத்தல், இரக்கமுடைமை, உண்மை ஆகிய ஐந்தும் பொருந்தி இருப்பவரே பண்புடையவர், சால்புடையவர் என்பதை இத் திருக்குறள் விளக்குகின்றது.

ஆழ்ந்து நோக்கினால், இவை அனைத்துமே மனத்தின் தன்மைகள் என்பதை உணரலாம். ஒப்புரவு என்ற உலக ஒழுக்கம் இன்னதுதான் எனத் தீர்மானிப்பது மனந்தான். "வாய்மை"யைத் தெரிந்து கொள்வதிலும் மனத்தின் பங்கு முக்கியமானது.

இனி, நாணம் என்பதன் சரியான கருத்தையும் நாம் தெரிந்துகொள்ள வேண்டும். மற்றையோரைப் போய்ப் பார்ப்பதற்கு, அவர்களுடன் உரையாடுவதற்குச் சிலருக்கு ஏற்படும் கூச்சத்தை, தயக்கத்தை-நாணம் எனச் சொல்வதுண்டு. ஆனால் இந்தக் கருத்தில் நாணம் இக் குறளில் இடம்பெறவில்லை. பிறர் அறிந்தால் என்னைப் பழிப்பர், தண்டனை தருவர் என்ற பயத்தாற் பலர் தவறுகளைச் செய்வதில்லை. யாருமே அறியாத, அறிய முடியாத சூழ்நிலையில் இத்தகையோர் தவறுகளை, தகாதவற்றைச் செய்வதற்குத் தயங்கமாட்டார்கள். ஆனால் மற்றவர்கள் பார்க்கிறார்களா இல்லையா என்பது முக்கியமில்லை. இந்தச் செயல் தவறானது, தீமை விளைவிப்பது நான் இதைச் செய்யக் கூடாது, செய்யவே மாட்டேன்" என்ற நிலை தான் திருவள்ளுவர் இக் குற

வெளிப்பாடு. "எங்கள் வீழ்ச்சிக்கு நாங்களே காரணம்; எங்கள் தோல்விக்கு நாங்களே காரணம், எங்களுடைய இன்றைய இழிநிலைக்கு, கலாசாரச் சிதைவுக்கு நாங்களே பொறுப்பு" என ஒவ்வொருவரும் - இளைஞர்கள், இளம்பெண்கள், பெற்றோர், ஆசிரியர், கல்விமான்கள், சமூகத்தலைவர்கள்- என எல்லோருமே சிந்திக்கத் தொடங்கினால் வரண்டுவிட்ட நாணம் வளமான ஊற்றாகப் பெருகும் என்பது நிச்சயம்.

உடையைப் பற்றி விவாதத்திற் கலந்து கொண்ட எல்லோருமே குறிப்பிட்டுள்ளார்கள். மானத்தைக் காப்பது. உடலாரோக்கியத்தைப் பேணுவது என்ற நோக்கங்களின் அடிப்படையிலே தான் தமிழ் மக்களின் பாரம்பரிய உடைகள் அமைந்துள்ளன; இவை மற்றையோரின் கீழ்த்தர உணர்ச்சிகளைத் தூண்டாதவை .இசை நிகழ்ச்சிகள், கும்மி, பரத நாட்டியம் போன்றவற்றிற கலந்து கொள்ளும் பெண்கள் சேலைகளையே அணிகின்றார்கள் இத்தகைய நிகழ்ச்சிகளில் ஒருவித தெய்வீகச் சூழல் நிலவுதற்கு இந்த உடையலங்காரமும் முக்கியமான காரணமாக இருக்கின்றது.

இவை அனைத்தையும் நாளைய உலகின் நற்தூண்களாக இருக்கவுள்ள இன்றைய இளைஞர்கள் இளம் பெண்கள கவனத்தில் எடுக்கவேண்டும். "பரம்பரை" தொடர்வதில்-நீடிப்பதில் முக்கிய பங்காற்றும் பெண்கள் பாரமபரியப் பண்புகளை வளர்த்தெடுப்பதிலும் பெரும பங்காற்றவேண்டும்.முன்னதில் இணையும் ஆண்கள் பின்னதிலும் அதிக ஈடுபாட்டுடன் இணைய வேண்டும்.

"பண்புடையார் பட்டுண்டுலகு"


**க.பொ.த. (சா.த)**


**மாணவர்களே! வலம்புரியில் தொடர்ந்து பயிற்சி வினாத் தாள்கள் வெளிவருகின்றன.**



# வியாழ மாற்றம்

(நேற்றைய தொடர்ச்சி)

## துலாம்



19.08.2004
முதல்
28.09.2004
வரை

இப்போது உங்களுக்கு ஆகாத குரு தான் விரயத்தில் இருக்கும், எனவே நல்ல தக வலை கொடுக்கும் மாதம். புதிய நண்பர் களை சேர்க்கும். உங்கள் திறமைக்கு மேல் நிலை மனிதர்களால் பாராட்டு, பரிசுக ளும் அளிக்கப்படும். புண்ணிய ஸ்தல பிரயாணத்தை மேற்கொள்வது கூட இருக்கும். நாகரீக வாகனம் வாங்குவது போன்ற நற்பலன்களும் இருக்கின்றன். பெண்களுக்கு பச்சை, நீலக்கல் ஆபரண சேர்க்கையும உண்டாகும். கலைப்பிரிவு ஆண், பெண்களுக்கு நிலையான பூமிப் பொருள் சேருவது, கட்டிடம் கட்டுவது போன்ற நன்மையும் விருந்து, வேடிக்கை அனுபவிக்கும் வாய்ப்பும் மீது பணம் கொடுப்பதும் உறவினர் நோய் வாய்ப்பட்டிருந்தவர்களுக்கு உபகாரம் செய்வதும் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிறைவு இருக்கிறது. புது மண தம்பதிகளுக்கு இன்ப விருந்து அளிககும காலமல்லவா? தைபொங்கலை இனிமை யாக கொண்டாட எல்லா வகையிலும் நன்மை இருக்கிறது. இந்த ராசி ஒப்பந் தத் தொழிலில் உள்ளவர்களுக்கு பில் தொகை தக்க சமயத்திற்கு வந்து சேர்ந்து விடும்.சில குடும்பத்திற்கு நாகாிகப் பொருள் சேர்க்கையும் உண்டாகும். கணவன் மனைவி உறவு இன்பமயமானது. சிலர் இம்மாதக் கடைசியில் புது இல்லம் குடி புகுதல் போன்ற நன்மையும் பெறுவர். குழந்தைகள் நலம் திருப்தியாகவே இருக் கிறது. வழக்கு தோன்றி வெற்றி பெறு வீர்கள். வேகமிக்க செயல் மற்றவர் களை அதிர்ச்சி அடையச் செயயும்.

**அதிர்ஷ்ட எண்கள் : 4, 2, 6**

**அனுகூலத திக்குகள் : தெற்கு, கிழக்கு**

### 28.09.2004 முதல் 11.11.2004வரை

பொதுவாக குடும்பத்தின் சூழ்நிலை அமைதியாக இருக்கின்றன. குழந்தை கள் ஆரோக்கியமும் கல்வி நிலையும் திருபதியாக இருக்கின்றன. சிலர் நாகாிக வாகனம், குடும்ப வகைக்கு நாகரிகப் பொருட்கள் வாங்குவதும் இருக்கிறன. புண்ணிய ஸ்தல பிரயாணமும் கூட இடம் பெறும். இப்போது சுக்கிரன் உங்கள் நட்பு கிரகமாக இருந்து நீச்சம் பெற்றது. சுப தொழில, கலைப் பிரிவினர், எழுத்தாளர் போன்றவர்களுக்கு அடுத்தடுத்து முயற் சியில் வெற்றியைக் கொடுக்கும் என்பதில சந்தேகமில்லை. சனி என்பதை மனதில் கொண்டு பயப்படுவதிலும் பயன் இல்லை. சனி தன் நட்பு வீட்டில் தான் இருக்கி றான் என்பதை மறக்கக் கூடாது உண்டாகும். இதற்குக் காரணம் குடும்ப இல்லத்தில் சுபர் பாராதது. மேலும் சில ருக்கு இப்போது காதல் கல்யாணமும் இடம் பெறவாய்ப்பு இருக்கிறது. கலைத் துறையே தொழிலாக உடையவர்களுக்கு தனம், கொடுக்கல் குடும்பம் இந்த வகை யில் பிடிப்பான போக்கும், சச்சரவு நிறைந தத்தாகவும் இருக்கும். தொழில் மூலம் உங் கள் கௌரவத்தை உயர்த்திக் கொள்வீர் கள. தன வரவு பெரிய முயற்சி ஊக்கம் தருவதாக அமைந்திருப்பதும் ஒரு சிறப்பு அம்சமே. அடிக்கடி மருத்துவச் செலவுகள இப்போது இல்லை. சிலருக்கு வழக்கு வெற்றியும் மன திருப்திருப்தியளிப்ப தாக இருக்கும்.குடும்பத் தேவைகள் குறித்தபடி பூர்த்தியாவதால் கணவன் மனைவி இடையே பிணக்கு தீர்ந்து விட் டன. மகிழ்ச்சியான சூழ் நிலையும் தொடர்ந்து இருந்துவரும்.

**அதிர்ஷ்ட எண்கள் : 5, 4, 1**

**அனுகூலத் திக்கு : தெற்கு**

### 11.11.2004 முதல் 26.12.2004வரை

மறைந்திருந்த செயல்கள் இப்போது வெளியாகும். குடும்ப உறவினர்களில் இருந்த கருத்து வேற்றுமை அகன்று விடும். தொழில் வழி கணக்கு. கூட்டு மனி தர்கள் உங்களுக்கு இணக்கமாக இருப் பர். புது உடைகள் சேர்க்கை, வாகனச சித்தி யும், தூரத்து சந்தோஷச் செய்தியும முக் கிய அம்சமாகும். கணவன் மனைவி உறவு கண்ணியம் உடையது. மாணவர்கள் கல்வி வகையில் உச்சகட்டத்தைப் பெறுவர். இப்போது கௌரவப் பதவியும் சிலரை வந்தடையும். எழுத்து ஒப்பந்தம் போன்ற நன்மைகள் கலைப் பிரிவினர்களுக்கு உண்டு. தொழில் வழியில் படிப்படியே முன்னேற்றத்தைக் காணலாம். பணம் பற்றாக்குறை படிபடியே குறைந்து வரு இலாகா மாற்றமோ செய்ய இருந்தது அது தள்ளிப்போய்விடும். இப்போதைய மாற்றம் மனத் திருப்தியளிக்காது. கலைப் பிரிவு ஆண், பெண்களுக்குப் பணவரவு திருப்தி அளிக்காது. பகைத்துக் கொண்ட வர்கள் மீண்டும் வந்து சேருவா.

**அதிர்ஷ்ட எண்கள் : 5, 1, 9**

**அனுகூலத் திக்கு : கிழக்கு**

### 26.12.2004 முதல் 11.02.2005வரை

தொழில் வகையில் சற்று மந்தம் காணும். தனம் வரவேண்டியதும் தாமதிக் கும். இதனால் குடும்பத்து மூத்தவரிடம் அடிக்கடி மனத்தாங்கலும் உண்டாக வாயப்பு இருக்கிறது. கடன் வழக்கு போன்றவைகள் பாதிக்க வாய்ப்பு இருக் கிறது. கலை, கட்டிடம் கட்டுவதும் இருக் கும். கணவன் மனைவி இடையில் கனி வான போக்கும், கவர்ச்சியும் உண்டா கும். குழந்தைகள் தேகசுகம் திருப்தி யாக இருக்கும். பெண்கள் வகைக்கு சிவபபு பச்சைக்கல் ஆபரண் சேர்க்கை யும் உண்டு. இந்த நிலையில் எத்தனை கொடுமைகள் ஏற்பட்டாலும் நிழல் போன்று நின்று செயல்பட கூடியவன் இந்த குரு. இப்போது உங்கள் முயற்சி அதிகமா கும். கடன் பட்டிருந்தாலும் கச்சிதமாக தொழில் வழியை செம்மைப்படுத்தக் கூடியவர் நீங்கள். கணவன் மனைவி இடையே இருந்த பூசல் குறைந்து விட் டது. சகோதரன் அலலது சகோதரி வகை யிலே ஏற்பட்டிருந்த நெருக்கடி நிலை இப்போது குறைக்கப்பட்டுவிட்டன. நாகரீக வாகனம் வாங்குவது, நல்ல மனிதர்களின் தொடர்பை ஏற் படுத்திக் கொள்வதும் உண்டாகும். உத்தியோ கப் பிரிவு ஆண், பெண்களுக்கு இனி மையாக கேந்திரத்து சூரியன் சும்மா இருக்கமாட்டானே. இடபெயர்ச்சியி

# உங்களுக்கு எப்படி?

கிட்டும். மாணவ மாணவியர்களுக்கு கல்வி மேன்மை அடையும் .உங்கள் சொந்த நலனைக் கருத்தில் கொண்டு சில வகை ஈடுபாட்டில் நீங்கள் விலகி இருப்பது மிகவும் அவசியம். மற்றவர் உங்களையும் உங்கள் ஆதிககததையும் பயன்படுத்தி நன்மை அடைவா என்பது குறிப்பிடத் தக்கது. சுக்கிரன் இப்போது சுக இல்லத் திற்கு சென்று விட்டான். இப்போது உங்களுக்கு வர வேண்டிய தொகையில் ஒரு பகுதி வந்து சேரும் பூமி வீடு போன்றவை வாங்குவதும் உண்டாகும். வழக்கு

எனவே. எப்படிப் பார்த்தாலும் படிப்படி யாக மேன்மை இருக்கத்தான் செய்யும். உன் குருவை கவனிக்க வேண்டும் இல் லையா? கணவன் மனைவி உறவு மன துக்கு இதமாகஇருக்கும். சிலருக்கு திடீரென அயல் நாட்டுப் பிரயாணம் உண்டாகும். உத்தியயோகப் பிரிவு ஆண், பெண்களுக்கு சூரியன், புதன், சனி சலிப் பில்லாமல் உழைப்பை உண்டாக்கும். சக ஊழியர்கள் அன்றியும், சூழ்நிலை ஊழியர்களும் உங்கள் நடைமுறை செய

வதையும் காணலாம். குடும்ப உறவில் நடக்கும் சுப விசேடங்களில் கலந்து கொள் வது, விருந்து புது உடை சேர்க்கையும் உண்டாகும்.

அயல்நாட்டுத் தொழில் உள்ளவர்கள முன்பு சிக்கல் ஏற்பட்ட வழியை விட்டு வேறு பாதையில் செல்வது அவசியமாகும். அரசியல் அரசாங்க சம்பந்தப்பட்ட மனிதர் கள் உங்களுக்கு அனுகூல கெதியில் தான் இயங்கி வருவர். எதிர்பார்த்த பணம் வரும். அதற்கடுத்த நாள் தேவையற்ற செலவுகள், அலைச்சலும் வரும்.

னால் இனிமையான சூழ்நிலையை உருவாக்கக் கூடியவன். தனி தொழிலில் இருந்தவாகள் அரசாங்க வேலையை ஏற்பது போன்றவையும் உண்டாகும். புத்திரர், புத்திரியர்கள் ஆரோக்கியம், குடும்ப வாழ்க்கையும் திருப்தி அளிக் கும். உங்கள் தொழில் சம்பந்தப்பட்ட கணக்கு களை மிகவும் கவனமாக கையாள வேண்டிய நேரமிது. அரசாங்கம் மூல மாக

மிகவும் அவசியம். மற்றவர் உங்களையும் உங்கள் ஆதிககதத்தையும் பயன்படுத்தி நன்மை அடைவா என்பது குறிப்பிடத் தக்கது. சுக்கிரன் இப்போது சுக இல்லத்திற்கு சென்று விட்டான். இப்போது உங்களுக்கு வர வேண்டிய தொகையில் ஒரு பகுதி வந்து சேரும் பூமி வீடு போன்றவை வாங்குவதும் உண்டாகும். வழக்கு கடன பிரச்சினைகள் வேகமின்றி இருப்பதுடன் பாதிப்பு கொடுக்கவும் முடியாது. சில சமயம் மற்றவருக்கு பணம் கொடுத்து விட்டு குறித்த காலத்தில் திரும்ப் பெற முடியாமையினால் உங்கள் அலுவல்கள் தேங்கி நிற்கவும் கூடும். திருமணம் போன்ற சுப விசேடங்கள் தள்ளிப் போவதும் உண்டாகும். அலுவல்கள் தெளிவான நிலையில் சென்று கொண்டே தான இருக்கிறன. தேவைகள் பூர்த்தியாவதிலும் தடை இல்லை. சகோதர வகையில் மனபேதமும் இருக்கத் தான் செய்யும். பிரயாணம், உறவினர். இல்லத்தில் விருந்து உண்பது போன்றவையும் தான் இருக்கின்றன. சுப விஷயம் குறித்த பேச்சுகள் திருப்தியாக இருந்தாலும் முடிந்து வருவது தாமதப்படுத்துகின்றன என்பது சூழ்நிலையை வைத்தே புரிந்து கொளவீகள். கலைப்பிரிவு ஆண், பெண்களுக்கு தனம், தொழில் இந்த வகையில் திருப்தியாக இருக்கும். ஆனால் வேகமில்லை என்பது ஒரு குறையாக இருக்கும். இப்பிரிவு மாணவ மாணவியர்களுக்கு குரு உயர்வளிப்பவனாக இருக்கிறான். எதிலும் வேகமாக இருக்கவும்.

குடும்பச் செலவுகள் குறிப்பிட்டதற்கு மேல் போய்விடும். புது உ டைகள், பழைய பொருட்கள் சேர்க்கையும் இருக்கிறது. குடும்பத்தில் தடைப்பட்டிருந்த காரியங்களுக்கு மதிப்பு இப்போது அதிகமாகும். தன விரயத்தைப் பற்றி இல்லை. காரிய சாதனைதான் பெரியது. பூமிப் பொருள்

லையா? கணவன் மனைவி உறவு மனதுக்கு இதமாகஇருக்கும். சிலருக்கு திடீரென அயல் நாட்டுப் பிரயாணம் உண்டாகும். உத்தியயோகப் பிரிவு ஆண், பெண்களுக்கு சூரியன், புதன், சனி சலிப்பில்லாமல் உழைப்பை உண்டாக்கும். சக ஊழியர்கள் அன்றியும், சூழ்நிலை ஊழியர்களும் உங்கள் நடைமுறை செயலுக்கு ஒத்து வருபவராக இருப்பர். சிலருக்கு இப்போது இடமாற்றம். இலகா மாறறத்தையும் செய்யும். அப்படி செய்யக் கூடியவன் குரு. வாகன வகை செலவும் இடம் பெறும். இல்லறத்தை இன்பமாக்கிக் கொள்ள வைப்பவன் சுக்கிரன், மேலும் அன்பாகள சற்று அலைச்சல் கூடுதலாக உடையவர்.

நீங்கள் குறித்த காலத்தில் செயல்படும் விதம் செம்மையாக இல்லாத காரணத்தால், தொழில் மந்தம் என்பதும் தானே வரக்கூடியவை தான். பழைய கடன் சில வார்த்தையளவில் பாதிப்பு கொடுப்பதாக இருக்கும். வழக்கு வகையும் அவ்வளவு வேகமில்லாமல் தான் இருக்கிறது. கணவன் மனைவி உறவு கண்ணியமுடையது தான். உங்களுக்கு அரசாங்க ஊழியர்களால் இந்த மாதம் எவ்வித நன மையும் இருக்காது என்பதும் உறுதி . மேலும இந்த நேரத்தில் குடும்பத்திலும் கடன் பட்டாவது சுப காரியங்களை நிறைவேற்றுவீர்கள் என்பதும் குறிப்பிடத் தக்கது. கூட்டுத் தொழில் உள்ளவர்கள் இப்போது முக்கிய பொறுப்புகளிலிருந்து விலகி இருப்பதும் நன்மையே. உத்தியோகப் பிரிவு ஆண்,பெண்களுக்கு இது பிரச்சினை உடையதாகத் தான் இருககும். பொலிஸ, இராணுவத் துறையில் உள்ளவர்களுக்கு இடமாற்றம், இலகா மாற்றம் சிலருக்கு வெளியூர் மாற்றமே இருக்கவும் கூடும். நோய் இல்ல சனியாக இருப்பதால் சிலருக்கு காலில் தொடர்ந்து ஆறாத காயமும இருக்கக் கூடும். சிலருக்கு இரண்டாவது குடும்பமும்

அயல்நாட்டுத் தொழில் உள்ளவர்கள முன்பு சிக்கல் ஏற்பட்ட வழியை விட்டு வேறு பாதையில் செல்வது அவசியமாகும். அரசியல் அரசாங்க சம்பந்தப்பட்ட மனிதர்கள் உங்களுக்கு அனுகூல கெதியில் தான் இயங்கி வருவர். எதிர்பார்த்த பணம் வரும். அதற்கடுத்த நாள் தேவையற்ற செலவுகள், அலைச்சலும் வரும். சிலருக்கு முரண் வழக்கு பொலிஸ் நிலையம் போவது உண்டாகும். பிறகு தான் நீங்கள் தெளிவு பெறுவீர்கள். உங்கள் கௌரவம், நாணயத்தை காப்பாற்றிக் கொள்ள அவசர முயற்சிகள் தேவைப்படும். தன விஷயத்தில் தாராள போக்குடையவர்தான் நீங்கள். மற்றவரை அதிகமாக நம்பும் தன்மை குறைய வேண் டும். நாகரிக வாகனச் செலவு சுப விசேடங்களில் கலந்து கொண்டு விருந்துண்பதும் உண்டாகும். கடன் வழக்கு பற்றிய பிரச்சினைகள் வேகம் குறையும். புத்திரர் புத்திரியர் முன்னேற்றத்திற்குக் குறைவு இல்லை. பூர்வீக சொத்துக்கள் சம்பந்தமான வழக்கு முடிவடைந்து இப்போது நல்லபடியாக இருக்கும். கவலைப்பட வேண்டாம். உங்கள் வாகனத்தில் செல்லும் போது கவனம் வேண்டும். பிரயாணம் தள்ளிப் போடுவது நல்லது. சில சமயம் கௌரவக் குறைவான வார்த்தைகளும் மனககசப்பான சூழ்நிலையும் சகோதர சகோதரி மத்தியில் உண்டாகும் தான் என்றாலும் அதன் மூலம் சில பிரச்சினைகளுக்கும் தீர்வு காண்பதும் உள்ளன. காலம் கடந்த பிரச்சினைகளை ஒரு நன் முடிவுக்குக் கொண்டுவரும் படியான சூழ்நிலை உருவாகும். இதனால் உறவினர் வழியில் ஏற்பட்ட சிக்கலைப் போககி மனத்திருப்தியடையலாம். கடன் சத்ருக்கள் வகையில் சில சமயம் ஏற்படும் சலன நிலை தொடர்ந்து இராது. வெகு விரைவில் தீர்ந்து விடும். உத்தியோகப் பிரிவு, ஆண், பெண்களுக்கு இடமாற்றமே ா

இருந்தவாகள் அரசாங்க வேலையை ஏற்பது போன்றவையும் உண்டாகும். புத்திரர், புத்திரியர்கள் ஆரோக்கியம், குடும்ப வாழ்க்கையும் திருப்தி அளிக்கும். உஙகள் தொழில் சம்பந்தப்பட்ட கணக்குகளை மிகவும் கவனமாக கையாள வேண்டிய நேரமிது . அரசாங்கம் மூல மாக பாதிப்பு கொடுக்க வாய்ப்பு இருக் கிறது. புதிய முயற்சியில் தொழில் அதிபர்களை பங்கு கொள்ள செய்ய பெரிய முயற்சியும் அத்ன் மூலம் வெற்றியும் பெறுவர். மாணவ மாணவி யர்களுக்கு கல்வி உயர்வு கவர்ச்சி தருவதாக இருக்கும். குடும்ப வேலை கள் குறித்தபடி முன்னேறி வரும். தொழில் வகையில் தனி திறமை உடையவர்களாக இருப்பீர்கள். உறவினரும் நண்பர்களும் பாராட்டாமல் இருக்க முடி யாது. பழைய கட்டிடத்தை புதுப்பித் தல், புது கட்டிடம் கட்டி முடித்தல் போன் றவையும இருக்கும். சிலர் இப்போது அயல்நாடு சென்று வருதல், அதி நாகரிக பொருட்களை கொண்டு வருவது போன்றவையும் இருக்கும். அரசாங்கம் மூலமாக எழுத்து வகை ஆதாரம் மட்டும் கிடைக்க சறறு காலதாமதமாகலாம். இப்போது இதற்குக் காரணமாக அமைந்து விட்ட குரு என்பது கவனிக்க வேண்டிய ஒன்று. இப்பிரிவு உத்தியோக ஆண், பெண் களுக்கு உவகையளிக்கும் சிலவற் றில் பலன்களும் உண்டு. அவை காதல் கலியாண வழியில் வெற்றி அடைவது என்பது தான். இப்போது சில நல்ல நண்பர்களையும் பெறுவீர்கள். பாராட்டுக்களும் விருந்து வேடிக்கை நிகழ்ச்சிகளும் இடம் பெறும். குடும்பத்தில் கௌரவச செலவுகளை அதிகமாக்கும். திடீரென திருமணம் கூடி வருவது, விருந்து ஏற்பதும் போன்றவையும் உண்டாகும். **அதிர்ஷ்ட எண்கள் : 6, 3, 8 அனுகூலத் திக்கு : வட மேற்கு**

*(தொடரும்)*

# கல்விப் பொதுத் தராதர (சா/த) மாதிரிப் பரீட்சை - 2004

## General Certificate of Examination (Ord. Level) Model Examination - 2004

விஞ்ஞானமும் தொழில்நுட்பவியலும் I

ஆக்கம் : சு.ப.கஜேந்திரன்
(Dip.in.Teaching Science)

நேரம - 1 மணி

**தரப்பட்ட விடைகளுள் மிகப் பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.**

01. வளிமண்டலத்தில் உள்ள வாயுக்களில் காபனீரொட்சைட்டின் சதவீதம் யாது?
1. 10% 2. 20% 3. 0.03% 4. 0.3%

02. தாவரக் கலங்களில் மட்டும் காணப்படும் அமைப்பு?
1. இழைமணி 2. பச்சைய உருமணி 3. கரு 4. கலமென்சவ்வு

03. வெப்பநிலையினை அளவிடும் சர்வதேச அலகு?
1. யூல் 2. நியூட்டன் 3. வாற்று 4. கெல்வின்

04. $^{12}_{6}C$ என்ற மூலகத்தின் அணு எண் யாது?
1. 6 2. 12 3. 18 4. 3

05. மைய நரம்புத் தொகுதியில் உள்ளடக்கப்படுவன?
1. மூளை, முண்ணான் 2. புலன் நரம்பு
3. புலன்நரம்பு, இயக்க நரம்பு 4. கலப்பு நரம்பு

06. வலு (**watt**) என்பதை சரியாக வரையறுக்காதது?
1. வலு $=\frac{\text{வேலை}}{\text{நேரம்}}$ 2. வேலை செய்யும் வீதம்
3. ஒரு செக்கனில் ஊடுகடத்தப்பட்ட சக்தியின் அளவு
4. ஒரு மணித்தியாலத்தில் செய்யும் வேலைகள்

07. **700cm** உயரத்திலுள்ள 4 முப திணிவுள்ள பனம்பழம் ஒன்றின் அழுத்த சக்தி யாது? **($G = 10ms^{-2}$)**
1. 280**J** 2. 2800**J**- 3. 28**J** 4. 7000**J**


08. இறப்பர் பாலில் அதிகளவில் காணப்படும் கூறு எது?
1. புரதம் 2. நீர் 3. றப்பர் 4. ரெசின்

09. மின் அழுத்திகளில் வெப்பச் சீராக்கத்திற்காக பயன்படுத்தப்படும் அமைப்பு யாது?
1. ஈர் உலோக நாடா 2. உருகி
2. தடக்காளி 4. சுற்று உடைப்பான்

10. காவிக் கணியத்தையும் எண்ணிக்கணியத்தையும் முறையே கொண்டமைந்த கூட்டம்?
1. கதி, இடப்பெயர்ச்சி 2. தூரம், கதி
2. ஆர்முடுகல், வேகம் 4. வேகம், தூரம்

11. நரம்புகளை ஆக்கும் அடிப்படை அலகு?
1. நரம்பு பசைக்கலம் 2. நரம்புக்கலம்
3. மயலின் கவசம் 4. நரம்புமுளை

12. மேலெறியப்பட்ட பொருள் ஒன்று கீழே வரும்போது அதன் இயக்கத்தை பிரதி பலிக்கும் வேக-நேர வரைபு?




13. வெற்றிடத்தினூடாக வெப்பம் கொண்டு செல்லப்படும் முறை யாது?
1. கடத்தல் 2. மேற்காவுகை 3. கதிர்வீசல் 4. யாவும் சரி

14. தொடரிணைப்பிணைக் காட்டாத அமைப்பு?
2Ω 2 2Ω 3Ω 4Ω


19. கல்சியம் ஐதரொட்சைட்டின் சூத்திரமாக அமைவது
1. **CaOH** 2. **$Ca(OH)_2$** 3. **$Ca_2OH_2$** 4. **$Ca_2OH$**

20. பல் வைத்தியர்கள் பல் பிடிங்கப் பயன்படுத்தும் ஆடி வகை?
1. குவிவாடி 2. தளவாடி 3. குழிவாடி 4. பரவளைவாடி

21. **2000J/Kg$^0$c** தன் வெப்பக் கொள்ளவுடைய **5 kg** திணிவுள்ள திரவமொன்றின் வெப்பநிலையை **30$^0$c** யிலிருந்து **45$^0$c**ற்கு உயர்த்த தேவையான வெப்பக் கணியம் யாது?
1. **5x2000x15** 2. **2000x30x45**
3. $\frac{\mathbf{2000}}{\mathbf{5x15}}$ 4. $\frac{\mathbf{15x2000}}{\mathbf{5}}$

22. ஒளி, ஒலி என்பன முறையே வளியினூடாக செல்லும் வேகம்?
1. **$350ms^{-1}$ , $1000ms^{-1}$** 2. **$3x105ms^{-1}$,$350ms^{-1}$**
3. **$3x108ms^{-1}$, $350ms^{-1}$** 4. **$350ms^{-1}$, $3x108ms^{-1}$**

23.




தரப்பட்ட குறுக்கலை இயக்கத்தின்அலை நீளம், வீச்சம் என்பன முறையே?
1. **a,b** 2. **b,a** 3.**a,b,c** 4. **c,a**

24. தன்கரந்தச் சேர்க்கையை தவிர்ப்பதற்காக தாவரங்கள் காட்டாத இசைவாக்கம்?
1. தன்மலட்டுத்தன்மை 2. சமனில்லாத தம்ப உண்மை
3. ஆணக முன்முதிர்வு 4. ஈர்இலிங்கப் பூக்கள்


25. இரசாயனத் தாக்கமொன்றின் தாக்கவீதத்தில் செல்வாக்குச் செலுத்தாத காரணி?
1. வெப்பநிலை 2. பொருளின் பெளதீக நிலை
3. செறிவு 4. பொருளின் விலை.

26. செக்கனுக்கு 10 முறை அதிரும் குறுக்கலை ஒன்று **0.5m** அலை நீளமுடையது, எனின் அதன் வேகம் யாது?
1. **$5ms^{-1}$** 2. **$10ms^{-1}$** 3. **$15ms^{-1}$** 4. **$30ms^{-1}$**

27. நிறப்பார்வைக்கும் பிரகாசமான விம்பங்களை தெளிவாகப் பார்ப்பதற்கும் பொறுப்பான கண்ணின் பகுதி யாது?
1. கதிராளி 2. கூண்வில்லை 3. பிசிர்த்தசை 4. மஞ்சட் பொட்டு

28. கதோட்டுக் கதிர்களின் பண்புகளின் ஒன்றாக கருத முடியாதது?
1. வெற்றிடத்தினூடாக பயணிக்கக் கூடியவை.
2. மறை ஏற்றமுடைய துணிக்கைகளாலானது.
3. நேர்கோட்டில் செல்லும்.
4. நேர் ஏற்றமுடைய துணிக்கைகளாலானது.

29. தடை, நிலைமாற்றி, உருகி, கல்வனோமானி என்பவற்றின் குறியீடுகள் முறையே?




30. உயிர்க்கோளம் ஒன்றின் ஒழுங்கமைப்பை சரியாகக் காட்டுவது?
1. தனியன் → இனம் → குடித்தொகை → சாகியம் → சூழல்தொகுதி
2. தனியன் → குடித்தொகை → சாகியம் → இனம் → சூழல்தொகுதி
3. இனம் → சாகியம் → குடித்தொகை → தனியன் → சூழல்தொகுதி
4. குடித்தொகை→ சாகியம் → இனம்→ தனியன் → சூழல்தொகுதி

31. தாவர கலப்பு பிறப்பாக்கத்தின் பிரதிகூலமாக அமையக்கூடியது?
1. நோய் எதிர்ப்புத் தன்மையுடைய தாவரங்களை ஆக்க முடியும்.
2. ருசி, நிறம் வேறுபட்ட அறுபடையைப் பெறலாம.
3. தூய பரம்பரை அலகு (வான்வகைப் பரம்பரை அலகு) அழிவடையலாம்.
4. நீண்ட காலம் பேணக்கூடிய அறுபடையைப் பெறலாம்.


32. எமது நாட்டில் நுகர்வோர் முதலிமை மின்வழங்கல்?
**1. 230V, 50Hz 2. 250V, 60Hz 3. 110V, 50Hz 4. 200V, 60Hz**


33. பீங்கான் பொருட்கள் தாயாரிக்கப்பயன்படும் களிமண் வகை எது?
1. தீக்களி 2. களிமண்ள கலந்த மண்
3. பந்துக்களி 4. சாதாரண களிமண்


34. **$Na_2Co_3$** இன் சூத்திரத் திணிவு யாது?


13. வெற்றிடத்தினூடாக வெப்பம் கொண்டு செல்லப்படும் முறை யாது?
1. கடத்தல் 2. மேற்காவுகை 3. கதிர்வீசல் 4. யாவும் சரி

14. தொடரிணைப்பிணைக் காட்டாத அமைப்பு?

1.



2.




3.




4.




15. கடற்காற்று, தரைக்காற்று முறையே வீசுவது?
1. பகல், இரவு 2. இரவு, பகல்
3. மதியம், பகல் 4. நள்ளிரவில்


16. மின்மணியின் சம்மட்டி 2 செக்கனில் 90 முறை அதிருகிறதெனில் அதன் மீடிறன் யாது?
1. 180Hz 2. 90Hz 3. 45Hz 4. 360Hz


16. தரப்பட்ட சுற்றிற்கு பொருத்தமான மின்னோட்ட வரை யாது?




1.



2



3.



4.



18. பின்வரும் வித்துக்களில் காற்றால் பரம்பும் கூட்டம் யாது?
1. மா, புளி, நெல்லி 2. பொன்னொச்சி, கறிமுருங்கை, வேங்கை
3. புலிநகம், பாக்கு, அலரி 4. நெல், மா, வேங்கை

1. 230V, 50Hz 2. 250V, 60Hz 3. 110V, 50Hz 4. 200V, 60Hz

33. பீங்கான் பொருட்கள் தாயாரிக்கப்பயன்படும் களிமண் வகை எது?
1. தீக்களி 2. களிமண்ள கலந்த மண்
3. பந்துக்களி 4. சாதாரண களிமண்


34. $Na_2Co_3$ இன் சூத்திரத் திணிவு யாது?
(Na = 23, C = 12, O=16)
1. 160 2. 180 3. 108 4. 106

35. தாவரக்கலங்களில் நீரையும், உணவையும் முறையே கடத்தும் இழையங்கள் ஆவன
1. காழ், உரியம் 2. உரியம், காழ் 3. மாறிழையம், காழ் 4. கலன்மாறிழையம், உரியம்

36. A - மனித செங்குழிய கலங்கள் இரட்டைக் குழிவானவை.
B - சுவாச நாடி ஒட்சி இறக்கப்பட்ட குருதியைக் காவும்.
C - செங்குழிய கலங்கள் கரு உடையவை.
D - ஒற்றைக்குழியம் சிறுமணிகள் அற்றது.
தரப்பட்ட கூறுகளில் சரியானது எது?
1. A,C 2. B, C,D 3. A, B,C 4. A, B, D

37. 2000g திணிவுடைய நாய்க்குட்டியொன்று $5ms^{-1}$ வேகத்துடன் ஓடும் அதன் இயக்கப்பாட்டுச் சக்தி
1. 25J 2. 200J 3. 20000J 4. 400J

38. ஆழி $S_1$ஐ மூடும்போது ஒளிரும் மின் குமிழ்கள் எவை?




1. A 2. C 3. C,A 4. B,D

39. $^{39}_{19}K$என்ற மூலகத்தின் நியூத்திரன்களின் எண்ணிக்கை?
1. 21 2. 20 3. 30 4. 15

40. வாகனங்களின் சாரதியின் பக்க ஆடியாக பயன்படுத்தப்படுவது?
1. குழிவாடி 2. குழிவு வில்லை 3. குவிவாடி 4. குவிவு வில்லை

**நாளை விஞ்ஞானமும் தொழில்நுட்பவியல் வினாத்தாள் பகுதி II உடன் பகுதி I விடைகளும் வெளிவரும்**

## தென்மராட்சி அபிவிருத்தி குறித்த விசேட கலந்துரையாடல்கள்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சிப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்திப் பணிகள் குறித்து அப்பகுதி கிராம அலுவலர்கள் மற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் ஆகியோருடனான ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனப் பிரதிநிதிகளின் விசேட கலந்துரையாடலொன்று கடந்த திங்களன்று சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் தென்மராட்சி பிரதேச செயலர் எஸ்.ஸ்ரீனிவாசன் தலைமையில் நடைபெற்றது.

மேற்படி அபிவிருத்திப் பணிகள் குறித்து வலய மட்டத்திலும கலந்துரையாடல்கள் நடாத்தப்படவுள்ளன. இதற்கமைய கொடிகாமம் வலயமட்ட அபிவிருத்தி குறித்த கலந்துரையாடல் நாளை வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு கொடிகாமம் பிரதேச சபை மண்டபத்திலும், வரணி வலயத்திற்குரிய கலந்துரையாடல் 31ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு வரணி மகாவித்தியாலத்திலும் நடைபெறவுள்ளன.

அத்துடன், சாவகச்சேரி வலயத்திற்குரிய கலந்துரையாடல் 31ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப.2.00 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும், கைதடி வலயத்திற்குரிய கலந்துரையாடல் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 3ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு கைதடி ப.நோ.கூ.சங்க மண்டபத்திலும் நடைபெறவுள்ளதாக தென்மராட்சிப் பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

(ற)

## பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்ப முடிவு தினம் செப்ரெம்பர் 3ஆம் திகதியென அறிவிப்பு

(கொழும்பு)

கடந்த ஏப்ரல் மாதம் நடைபெற்ற கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பப்படிவங்களை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 3ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவேண்டும் என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் றஞ்சித் மெண்டிஸ் அறிவித்துள்ளார்.

இதேவேளை, கல்விப் பொது தராதர உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பப் படிவங்களை அனுப்புவதில் பெரும் சிக்கலை எதிர்நோக்கி வருவதாகக் கூறப்படுகின்றது.

பாடசாலைகள் விடுமுறைக்காக மூடப்பட்டிருப்பதால் அதிபரின் கையொப்பத்தைப் பெறுவதற்கு முடியாமலிருப்பதே இச் சிரமங்களுக்கான முககிய காரணம் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ற-க,60)

## பெற்றோலியக் கூ.தாபனத்தின் திறைசேரிக்கு உரித்தான பங்குகளை தனியார் மயப்படுத்தலில் சிக்கல்கள்

(கொழும்பு)

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் திறைசேரிக்கு உரிமையான பங்குகளைத் தனியார் மயப்படுத்தினால் அது பயனளிக்காது எனப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் ஒன்றிணைந்த தொழிற்சங்கக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அதன் தொழிற்சங்கக் கூட்டமைப்பு ஆராய்ந்து எடுக்கப்பட்ட முடிவுகளை எரிபொருள் மின்சக்தி அமைச்சர் சுசில் பிறேமஜயந்தவிடம் கையளிக்கவுள்ளது.

உலக சந்தையின் தராதரத்திற்கு ஏற்ப இலங்கையில் எரிபொருளின் விலை அதிகரிக்காததால் ஏற்பட்டுள்ள நட்டங்களை கருத்தில் கொண்டே இம் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

(ற-ப)

## மனித உரிமைகள் அமைப்பின் பிரதிநிதிகள் கூடி ஆராய்ந்தனர்

யாழ்.மாவட்ட அரச சார்பற்ற அமைப்புக்களின் இணையத்தில் நேற்று முன்தினம் மனித உரிமைகளைப் பாதுகாத்தலுக்கும், மேம்படுத்தலுக்குமான குழுவினது மாதாந்தக் கூட்டம் வடமராட்சி உதவிக் கல்விப் பணிப்பாளர் ம.சிறீபதி தலைமையில் நடைபெற்றது.

இதில் அரச சார்பற்ற அமைப்புக்களின் பிரதிநிதிகள் பங்குபற்றியுள்ளனர்.

இக்கூட்டத்தில் இந்தியாவில் இருந்து தாயகம் திரும்பிவந்த ஈழத்தமிழ் அகதிகளுக்கான இலவச உலர் உணவு வழங்கப்படாமை பற்றியும், வடக்கு-கிழக்கில் உள்ள பாலர் பாடசாலை மாணவர்களுக்கென ஒழுங்கமைக்கப்பட்ட பாடதிட்டங்கள் இல்லாததால் பாடசால்ல மாணவர்களுக்கு வெவ்வேறான பாடங்கள் கற்பிக்கபபடுகின்றமை காரணமாக ஏற்பட்டுள்ள பல்வேறு குழப்பங்களால அரசாங்கம் பாலர் பாடசாலைகளைப் பொறுப்பேற்றமை மற்றும் அம் மாணவர்களுக்கு பொதுவான கல்வித்திடடம் ஒன்றை உருவாக்கவேண்டும் என்பதை வலியுறுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்தல் பற்றியும் ஆராயப்பட்டது.

அத்துடன், தென்மராட்சி பிரதேச செயலகர் பிரிவில் உலக வங்கியின் நிதியுதவியுடன் நிர்மாணிக்கப்படவுள்ள 25 வீட்டுத்திட்டத்தை ரத்துச் செய்தமை பற்றியும் ஆராயப்பட்டது. (ப-19)

## 200 பாடசாலைகளில் கணனி மையங்கள் அமையும்

(கொழும்பு)

நாட்டில் உள்ள 200 பாடசாலைகளில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன் கணனி மையங்கள் திறக்கப்படும் என கல்வி அமைச்சின் திட்டப்பணிப்பாளர் அனுரா திஸ்ஸ நாயக்கா தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே மாகாணக் கல்வி அமைச்சின் கீழ் உள்ள 800 பாடசாலைகளில் கணனி மையங்கள் திறக்கப்பட்டுள்ளன.

எனவே, எதிர்காலத்தில் நிறுவப்படவுள்ள 200 கணனி மையங்கள் தேசிய பாடசாலைகளிலும், நவோதயா பாடசாலைகளிலும் திறக்கப்படும் எனவும் திட்டப்பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

மாணவர்களிடையே கணனி அறிவினை வளர்க்கும் நோக்குடனேயே இவ்வாறான கணனி மையங்கள் திறக்கப்படவுள்ளன.

இதேவேளை, புதிய கல்விச் சீர்திருத்தத்தின் கீழ் பாடசாலைக் கல்வியுடன் கணனிக் கல்வியையும் இணைத்துப் பயிற்றுவிக்க கலவி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

(ப)

## நிர்வாகசபை தெரிவு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி பழைய மாணவர் சங்கத் தலைவராக இலங்கை வங்கியின் வட வலய உதவிப் பொது முகாமையாளர் கே.பாலசுப்பிரமணியம் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

உப தலைவர்களாக என்.தங்கராஜா, எஸ்.சிவகுமார், எஸ்.நடராஜலிங்கம், வின்சென்ட் டீபோல், எம்.வேதாபரணம் ஆகியோரும், இணைச் செயலாளர்களாக கே.வி.செல்வராஜன், கே.அருளானந்தம் ஆகியோரும், பொருளாளராக கே.தவநேசனும், உதவிப் பொருளாளராக ஆர்.இராசசீலனும் தெரிவு செய்யப்பட்டனர்.

13அங்கத்தவர்களைக் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

(க-52)

## சந்தையை தொடர்ந்து இயக்கக் கோரிக்கை

(மருதங்கேணி)

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இயங்கிவரும் ஒரே ஒரு சந்தையான மருதங்கேணிச் சந்தை வாரத்தில் எல்லா நாட்களும் இயங்க வேண்டுமென மீளக்குடியமர்ந்துள்ள அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இச் சந்தை செவ்வாய்,வெள்ளி, ஞாயிறு ஆகிய மூன்று தினங்களில் மட்டுமே இயங்குகிறது. மிகுதி 4நாட்களிலும் இயங்குவதில்லை.

இதனால் அன்றாட தேவைகளைப் பூர்த்திசெய்ய முடியாமல் மக்கள் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்குகின்றனர்.

(க-7,35)

## வீதி புனரமைக்கப்படவில்லை

(மருதங்கேணி)

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள வாரிவெட்டன் வீதி புனரமைக்கப்படாததால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். குறிப்பாக பாடசாலை மாணவர்கள் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர்.

மருதங்கேணி நாவலடிச் சந்தியிலிருந்து உடுத்துறை மகாவித்தியாலயத்திற்குப் போகும் பிரதான வீதியான இப்பாதை மணலாகவே காட்சியளிக்கிறது.

இப்பாதை சம்பந்தமாக அப்பிரதேச மக்கள் உரியவர்களுக்குச் சுட்டிக்காட்டியும் இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனவும் இவ்வீதிக்காக ஒதுக்கப்பட்ட நிதி வேறு வீதிக்கு மாற்றப்பட்டதாகவும் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

சம்மந்தப்பட்டவர்கள இவ்வீதியைத் திருத்துவதற்கு நடவடிகை எடுக்குமாறு மக்கள் சார்பில் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

(க-35)

## பெயர் பட்டியல் 31ஆம் திகதி வெளியாகும

(கொழும்பு)

பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் செயற்திட்டத்தில் 2ம் கட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் பெயர்ப் பட்டியல் எதிர்வரும் 31ஆம் திகதி வெளியிடப்படும் என நிதியமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

முதல்கட்டத்தில் தேர்ந்தெடுக்கபபட்ட 17ஆயிரம் பட்டதாரிகளுக்கான பயிற்சிகள் எதிர்வரும் 2ம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

(இ-8)

## விண்ணப்பம் கோரல்

(கொழும்பு)

மொரட்டுவப் பல்கலைக்கழகத்தில் தகவல் தொழில்நுட்பத்துறையில் மாணவர்களை உள்ளீர்ப்பதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(ற-ப)

## மாலைதீவு நிலை குறித்து பிரதமர் மகிந்த கவலை

(கொழும்பு)

மாலைதீவில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை குறித்து பிரதமர் மகிந்த ராஜபக்ஷ கவலை தெரிவித்துள்ளார்.

அந்த நாட்டு அரசாங்கத்திற்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்கப்போவதாகவும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ மாலைதீவு சுகாதாரத்துறை அமைச்சர் மொகமட் அப்துல்லாவிடம் தெரிவித்துள்ளா.

மாலைதீவு நிலைமைகள் குறித்து விளக்குவதற்காக கடந்த திங்கட்கிழமை இலங்கை வந்த அமைச்சர் மொகமட் அப்துல்லா, பிரதமர் மகிந்த ராஜபக்ஷவை சந்தித்துப் பேசிய போதே இதனைத் தெரிவிததுள்ளார். (க-60)

## மின்சாரக் கட்டணங்கள் 5 சதவீதத்தால் அதிகரிப்பு

(கொழும்பு)

மின்சாரக்கட்டணங்களில் 5சதவீத அதிகரிப்பை மேற்கொள்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக நிதி அமைச்சின் செயலாளர் ரி.வி.ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

கடந்த திங்களன்று நிதியமைச்சின் அலுவலகத்தில் நடைபெற்ற விசேட கூட்டத்திலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் இது குறித்துத் தெரிவிக்கையில்,

மினசாரக் கட்டணங்களை அதிகரிப்புச் செய்யுமாறு இலங்கை மின்சாரசபை அரசிடம் கோரியதையடுத்தே 5சதவீத அதிகரிப்பை மேற்கொள்ள அரசு தர்மானித்துள்ளது.

இந்த 5சதவீத அதிகரிப்பு அடுத்த ஓரிரு வாரங்களில் நடைமுறைக்குக் கொண்டுவரப்படும்.

இதேவேளை, சர்வதேச சந்தையில் ஏற்பட்டுள்ள எரிபொருள் விலையதிகரிப்பும் மின்சாரக் கட்டண அதிகரிப்புக்கு மற்றொரு காரணம் எனக் குறிப்பிட்ட அவர், 60 வீதமான எரிபொருள்,மின் உற்பத்தி நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்பட்டு வருவதாகவும் சுட்டிக்காட்டினார்.

அத்துடன், பேருந்து சேவைக்கான கட்டணங்களை 8சதவீதத்தாலும் தொடருந்து சேவைக்கான கட்டணங்களை 7முதல் 8சதவீதத்தாலும் அதிகரிப்பதற்கும் அரசாங்கம் தீமானித்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (ற-க)

## மருந்துத் தட்டுப்பாட்டை நீக்க சுகாதார அமைச்சு நடவடிக்கை

(கொழும்பு)

மருந்துப் பொருட்களின் தட்டுப்பாட்டினை நீக்குவதற்கு சுகாதாரத்துறை அமைச்சர் நிமால் ஸ்ரீபால டி சில்வா நடவடிக்கைகளை எடுத்துள்ளார்.

இதற்காக மருந்துப் பொருட்களை இறக்குமதி செய்வதற்காக சுமார் 300கோடி ரூபாவை ஒதுக்கீடு செய்வதற்கான பிரேரணையை இவர் அமைச்சரவையில் சமர்ப்பித்துள்ளார்.

அரசாங்க வைத்தியசாலைகளின் தேவைகளுக்கான மருந்துப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கு வருடாந்தம் 800 கோடி ரூபா செலவிடப்படுகிறது.

ஆனால், முன்னைய அரசு இதற்காக 120கோடி ரூபாவையே ஒதுக்கியது.

இதனால அக்காலத்தில் மருந்துப் பொருட்களுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவியது.

இதனைக் கவனத்தில் கொண்டே தற்போது இதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என சுகாதாரத் துறை அமைச்சர் மேலும் சுட்டிக் காட்டியுள்ளார். (ற-ப)

## இருவேறு சூட்டுச் சம்பவங்களில் மூவர் கொல்லப்பட்டுள்ளனர்

(கொழும்பு)

நுகேகொட ஹங்கொடவளப் பகுதியில் நேற்று முன்தினம் நண்பகல் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

ஹங்கொடவள நீதிமன்றத்துக்கு வந்தவர்களை இலக்கு வைத்து வாகனம் ஒன்றில் வந்தவர்களால் துபபாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிய வருகிறது.

இதேவேளை, கொழும்பு கொட்டாவப் பகுதியில் இடம்பெற்ற மற்றுமொரு துப்பாக்கிச் சூட்டுச்சம்பவத்தில் இருவர் கொல்லப்பட்டுள்ளனர்.

இரண்டு தரப்பினருக்கிடையில் இடம்பெற்ற வாக்குவாதத்தையடுத்து இடம்பெற்ற இத் துப்பாக்கிச் சூடடுச் சம்பவத்தில், சம்பந்தப்பட்ட இருவரும் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இக் கொலைச் சம்பவங்கள தொடர்பாகப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ற-8)

## வரட்சி நிவாரணத்திற்கென 50 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு

(வவுனியா)

இடம்பெயர்ந்தோருக்கான உலர் உணவு நிவாரணத்தைப் பெறுவோருக்கும், மூவாயிரம் ரூபாய்க்கும் மேற்பட்ட மாதவருமானத்தை உடையோருக்கும், வரட்சி நிவாரணம் வழங்கப்படமாடடாதென வவுனியா மாவட்ட மேலதிக அரச அதிபர் ரகுநாதபிள்ளை தெரிவித்துள்ளார்.

அத்துடன், உலக உணவுத் திட்டத்தின் கீழ், உதவி பெறுவோர்களுக்கும் இந்த நிவாரணம் வழங்கப்படமாட்டாது என்றும் அவர் தெரிவித்துள்ளா.

வவுனியா செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இக் கூட்டத்தில் வன்னிமாவட்டப பாராளுமன்ற உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

ஓமந்தை,அரசமுறிப்பு மாளிகை மறறும் காயன்குளம் ஆகிய கிராமங்களிலுள்ள மக்களுக்கு குடிநீர் விநியோகத்தை மேற்கொள்வதற்கும், வரட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களை வழங்குவதற்குமென அரசு 50இலட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளது எனவும் மேலதிக அரச அதிபர் ரகுநாதபிள்ளை மேலும் தெரிவித்தார். (ற-க,61)

# முத்தையா முரளிதரனுக்கு இடமில்லாத ரிச்சி பெனாட்டின் உலக XI கனவு அணி

அவுஸ்திரேலிய கிரிக்கெற் அணியின் முன்னாள் தலைவரும் தொலைக்காட்சி வர்ணனையாளருமான ரிச்சி பெனாட் உருவாக்கியுள்ள உலக XI கிரிக்கெற் அணியில் இலங்கை அணியின் சுழற்பந்து வீச்சாளரான முத்தையா முரளிதரனுக்கு வாயப்பு வழங்கப்படவில்லை.



கிரிக்கெற் விளையாடும் அனைத்து நாடுகளையும் சேர்ந்த முன்னாள் இந்நாள் வீரர்களை உள்ளடக்கி ஒரு கனவு அணியை உருவாக்கியுள்ளார் இவர்.

இவ் அணியில் 4 அவுஸ்திரேலிய வீரர்களுக்கும் தலா இரண்டு இந்திய, மேற்கிந்திய தீவுகள், இங்கிலாந்து அணி வீரர்களுக்கும் ஒரு பாகிஸ்தான் வீரருக்கும் வாய்ப்பளித்துள்ள பெனாட் இலங்கை, தென் ஆபிரிக்கா, நியூசிலாந்து போன்ற அணிகளில் இருந்து எந்தவொரு வீரருக்கும் வாய்ப்பளிக்கவில்லை.

இவரது அணியில் இங்கிலாந்து அணியின் முன்னணி வீரரான ஜக்ஹொப், இந்தியாவின் சுனில் கவாஸ்கர் ஆகியோர் ஆரம்ப வீரர்களாகவும் கிரிக்கெற்றின் தந்தை என வர்ணிக்கப்படும் டொனால்ட் பிரட்மண் 3வது வீரராகவும் இந்திய அணியின் நட்சத்திர வீரர் சச்சின் 4வது வீரராகவும் இடம்பெற்றுள்ளனர்.

இவர்களுடன் மேற்கிந்திய அணியின் விவியன் ரிச்சர்ட்ஸ் பாக் அணியின் இம்ரான்கான் ஆகியோர் சகல துறை வீரர்களாகவும் இணைக்கப்பட்டுள்ளனர். விக்கெற் காப்பாளராக தற்போதைய அவுஸ்திரேலிய அணியின் விக்கெற் காப்பாளர் அடம் கில்கிறிஸ்ட் தெரிவு செய்யப்பட்டுள்ளார். வேகபபந்து வீச்சாளர்களாக சிட்னி பார்ன்ஸ் டெனிஸ் லில்லி ஆகியோரும் இடம்பெற்றுள்ளனர். ஒரேயொரு சுழற்பந்து வீச்சாளராக ஆஸியின் ஷேன்வோர்னும் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

ரிச்சி பெனாட்டின் கனவு அணி வருமாறு ஜக் ஹொப்ஸ், சுனில் கவாஸ்கர், டொன் பிரட்மன், சச்சின் டெண்டுல்கர், விவியன் ரிச்சர்ட்ஸ், இம்ரான்கான், கார்பீல்ட் சோபர்ஸ், அடம் கில்கிறிஸ்ட், ஷேன்வோன், சிட்னி பார்ன்ஸ், டெனிஸ் லில்லி. (ப-121)

# முத்தரப்பு ஒருநாள் போட்டியில் வெற்றிவாய்ப்பை இழந்தது இந்தியா

நெதர்லாந்தின் ஆம்ஸ்டர்டாமில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் முத்தரப்பு ஒருநாள் கிரிக்கெற் போட்டிகளில், இந்திய அணி வெளியேற்றப்படும் நிலையில் உள்ளது.



நடந்துமுடிந்த அவுஸ்திரேலிய-இந்திய அணிகளுக்கிடையிலான போட்டி மழைகாரணமாக கைவிடப்பட்டதால் இரு அணிகளுக்குமே தலா 3 புள்ளிகள் வழங்கப்பட்டன.

இந்திய அணி -2என ஓட்ட வேகவீதத்தையே பெற்றிருக்கிறது. ஏற்கனவே பாகிஸ்தான் 6 புள்ளிகளைப் பெற்று அடுத்த சுற்றுப் போட்டிக்கு தெரிவாகிவிட்ட நிலையில் அவுஸ்திரேலியாவும் இந்தியாவும் 3 புள்ளிகளைப் பெற்றிருக்கின்றன.

அடுத்துவரும் பாகிஸ்தான் அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான போட்டியில் பாகிஸ்தான் மிகப்பெரிய வெற்றியை பெற்றால் மாத்திரமே அவுஸ்திரேலியா அடுத்த சுற்றில் விளையாட முடியாமல் போகும். இதற்காக -2ஏன்ற ஓட்டவேக வீதத்திற்குக் குறைவாக அவுஸ்திரேலியா ஓட்டத்தைப் பெற்றால் மாத்திரமே அடுத்தசுற்றில் இந்தியா விளையாடமுடியும்.

ஆனால் இது அவ்வளவு சாத்தியமில்லை.

இப் போட்டியில் அவுஸ்திரேலிய அணியை இந்திய அணி வெற்றிபெற வாய்ப்புகள் இருந்தபோதிலும் மழை அதனைத் தடுத்துவிட்டது.

(ப-7)

## ATHENS 2004

XXVIII OLYMPICS 13-29 AUGUST

### ஒலிம்பிக் இன்று 14ஆம் நாள்

# ஊக்கமருந்து பாவித்தால் இருவருட தடையுத்தரவு

## ஐ.சி.சியின் நிறைவேற்று அதிகாரி எச்சரிக்கை

மினி உலகக் கிண்ண கிரிக்கெற் போட்டிகளில் பங்கு பற்றும் எந்த வீரராவது ஊக்கமருந்து பாவித்தால், மறுபரிசீலனையின்றி அவர் மீது இரண்டுவருட தடை உத்தரவு பிறப்பிக்கப்படும் என ஐ.சி.சியின் பிரதம நிறைவேற்று அதிகாரியான மல்ஹம் ஸ்பீட் எச்சரிக்கை விடுத்துள்ளார்.



அடுத்த மாதம் இங்கிலாந்தில் நடைபெறவிருக்கும் சர்வதேச கிரிக்கெற் சபையின் (ஐ.சி.சி) மினி உலகக் கிண்ணப் போட்டிகள் தொடர்பாக கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

போட்டிகளில் பங்குபற்றும் வீரர்கள் யாராவது ஊக்கமருந்து பாவிப்பது கண்டுபிடிக்கப்பட்டால் அவர்களுக்கு உடனடியாக இரண்டுவருடத் தடை விதிக்கப்படுவதுடன், அவர்களிடமிருந்து மிகப்பெரிய பணத்தொகையொன்று அபராதமாகவும் விதிக்கப்படுமென எச்சரிக்கை விடுத்துள்ளார் மல்ஹம் ஸ்பீட்.

இந்த ஊக்க மருந்துப் பரிசோதனையானது எந்தவித முன்னறிவித்தலுமின்றி திடீரெனவே வீரர்கள் மீது நடாத்தப்படும் எனவும் அறிவித்துள்ளார்.

இதேவேளை, கடந்த உலகக் கிண்ணப் போட்டியில் அவுஸ்திரேலிய வீரர் ஷேன்வோன் ஊக்க மருந்து பாவித்ததன் காரணமாகவே போட்டிகளில் பங்குபற்ற அவருக்கு ஒரு வருட தடைவிதிக்கப்பட்டி ருந்தது.

இதன் பின்னரே ஐ.சி.சி.ஊக்கமருந்துப் பாவனை தொடர்பாக கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

(ப-7)

# ஒலிம்பிக்கில் இன்று...

• கிரேக்கத்தின் தலைநகர் எதென்ஸில் நடைபெற்றுவரும் 2004 ஒலிம்பிக் போட்டியின்பதின் நான்காம் நாளான இன்று.

தடகளப்போட்டிகள், கூடைப்பந்து, படகோட்டப்போட்டிகள், நீச்சல், சாகசம், ஜிம்னாஸ்டிக் - இசை, கைப்பநது, ஹொக்கி, நவீன பெனடத்லோன, நீச்சல், டெக்வான்டோ, ட்ரைத்லோன், கரப்பந்தாட்டம், வோட்டர் போலோ, மல்யுத்தம் ஆகிய போட்டிகள் நடைபெறவுள்ளன.

(ற-7)

## ATHENS 2004

MEDALS

| நாடு | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| அமெரிக்கா | 25 | 28 | 19 | 72 |
| சீனா | 24 | 15 | 12 | 51 |
| ஜப்பான் | 15 | 08 | 09 | 32 |
| அவுஸ்திரேலியா | 14 | 09 | 14 | 37 |
| ரஷ்யா | 09 | 18 | 21 | 48 |



யாழ்.மாவட்ட கரபந்தாட்ட சங்கத்தினால் மாவட்ட ரீதியில் நடாத்தப்பட்ட கரபந்தாட்டப் போட்டியின் இறுதி ஆட்டம் அண்மையில் சங்க விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றபோது சங்கத்தலைவர் கப்ரின் டி.ஏ.எம்.குணசிங்கம் ஜே.பி. கரபந்தாட்டத்திற்கு ஆற்றிவரும் சேவைகளுக்காக கௌரவிக்கப்பட்டார்.

இறுதிநாள் நிகழ்வில் அச்சுவேலி விளையாட்டுக் கழக அணித் தலைவர், கப்ரின் டி.ஏ.எம்.குணசிங்கத்திற்கு மலர் மாலை அணிவித்துக் கௌரவிப்பதைப் படத்தில் காணலாம்.

படம்:-சுண்டுக்குளி நிருபர்.

# 5 ஒலிம்பிக் போட்டிகளில் 100 தங்கம் உலகை பிரமிக்க வைக்கிறது சீனா

கடந்த 5ஒலிம்பிக் போட்டிகளில் 100தங்கப் பதக்கங்களை வென்று சீனா தொடர்ந்தும் சாதனைகளைத் தக்கவைத்துள்ளமை அவதானிகளை பெரும் பிரமிப்பில் ஆழ்த்தியுள்ளன.

மகளிர் ஒற்றையர் பிரிவுக்கான டேபிள் டென்னிஸ் அந்நாட்டின் டின் ஜோங்யினிங் கைப்பற்றிய தங்கப்பதக்கம் சீனாவுக்கு 100ஆவது பக்கமாக அமைந்தது.

நேற்றுவரை நடைபெற்ற போட்டிகளின் முடிவில் 24 தங்கம், 15 வெள்ளி 12 வெண்கலப் பதக்கங்களுடன் பதக்கப்பட்டியலில் இரண்டாம் இடத்தை பெற்றுள்ளது சீனா. 2004ஆம் ஆண்டு எதென்ஸ் ஒலிம்பிக் போட்டியில் 20தங்கப் பதக்கங்களை வெல்லவேண்டும் என்பதையே இலக்காகக் கொண்டு களமிறங்கியது சீனா.

கடுமையான போர் புரட்சி மற்றும் அரசியல் காழ்ப்புணர்ச்சியால் ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்காமல் இருந்த சீனா 1984ஆம் ஆண்டு லொஸ் ஏஞ்சலீஸில் நடைபெற்ற 23வது ஒலிம்பிக் போட்டியில் அடியெடுத்து வைத்தது.

இதேவேளை, 29வது ஒலிம்பிக் போட்டி 2008ஆம் ஆண்டு சீனாவில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ப-121)

# கொய்யாத்தோட்ட அணி வென்றது

கிறீன் பீல்ட் விளையாட்டுக் கழகம் அதன் 46வது ஆண்டு நிறைவை முன்னிட்டு சுண்டுக்குளி கிராம மட்டத்தில் கிறீன் பீல்ட் விளையாட்டு மைதானத்தில் கடந்த ஒரு வாரமாக நடாத்திவந்த 6 வீரர்கள் பங்குபற்றும் "ஓவர்கேம்" முறையிலான கரபந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டம் கடந்த 22ஆம் திகதி மாலை விளையாட்டுத்துறை பொறுப்பாளர் எ.வெஸ்லி அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

இவ் ஆட்டத்தில் சுண்டுக்குளி விளையாட்டுக்கழக அணி அதனை எதிர்த்து ஆடிய கொயயாத்தோட்ட விளையாட்டுக் கழக அணியை இரு நேர் செற்களில் 15:01,15:01என்ற புள்ளிகள் அடிப்படையில் வெகு இலகுவாக வென்று வெற்றிக் கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டது.

இவ் ஆட்டத்திற்கு நடுவராக கே.நாகேந்திரன் கடமையாற்றினார். (ப-110)

## ஒலிம்பிக் போட்டியாளர்களிடையே

# ஊக்க மருந்துப் பரிசோதனையில் 3 இந்தியர் உட்பட 10 பேர் சிக்கினர்

எதென்ஸில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் 28ஆவது ஒலிம்பிக் போட்டிகளில் பங்குபற்றிய போட்டியாளர்களில் 10பேர் ஊக்கமருந்து பாவித்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இவர்களில் பதக்கம் பெற்றவர்களின் பதக்கங்கள் பறிக்கப்பட்டுள்ளதுடன் அவர்கள் தொடர்ந்து போட்டிகளில் பங்குபற்ற முடியாதவாறு திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

இந்தியா முதல்த் தடவையாக இந்த ஊக்கமருந்துப் பாவனைச் சிக்கலில் மாட்டியுள்ளது. இந்தியப் போட்டியாளர்கள் மூவர் ஊக்கமருந்த பாவித்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஒலிம்பிக் வரலாற்றில் இந்தியப் போட்டியாளர்கள் ஊக்க மருந்து பாவித்திருப்பது இதுவே முதற்தடவையாகும்.

இதனையடுத்து இந்தியாவின் பளுதூக்கும் பயிற்றுவிப்பாளர்கள் பதவியிலிருந்து போல்ஜெஸ் அன்ரு மற்றும் பால ஆரியன் லெனாட் ஆகியோர் நீக்கப்பட்டிருக்கின்றனர்.

பளுதூக்கும் போட்டியாளர்களான பாத்திமா குமாரி, ஷன் மாச்சா ஷானு ஆகியோர் எதென்ஸ் போட்டிகளின்போது ஊக்கமருந்து பாவித்தமை கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்தே இந்த இரு பயிற்றுவிப்பாளர்களும் அவர்களது பதவியிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப-7)

இன்மையின் இன்னாது உடைமை முறைசெய்யா
மன்னவன் கோற்கீழ்ப் படின் -குறள்

வலம்புரி

## விசாரணைகள் இல்லாத இராணுவத் தீர்ப்புகள்

1990 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 25 ஆம் திகதி தீவக மக்கள் இராணுவத்தின் ஆக்கிரமிப்புக்குள் அகப்பட்ட நாள். கோட்டை இராணுவத்தை மீட்டெடுப்பதற்காக ஊர்காவற்றுறையில் இருந்து இராணுவம் மேற்கொண்ட நகர்வு நடவடிக்கை 1990 ஆகஸ்ட் 25 ஆம் திகதி மண்டைதீவில் இராணுவம் நிலைகொண்ட தன்மூலம் மண்டைதீவு, அல்லைப்பிட்டி, மண்கும்பான் மக்கள் இராணுவத்தின் ஆக்கிரமிப்பிற்குள் அகப்பட்டுக்கொண்டனர்.

மிகவும் மோசமான தாக்குதல் என்று கூறும் அளவிற்கு கொலைகள் மலிந்த தாக்குதலாக இது கருதப்பட்டது. யாழ். கோட்டைக்குள் அகப்பட்ட இராணுவத்தை மீட்டெடுப்பதற்காக முப்படைகளும் நடத்திய தாக்குதலில் 300க்கும் மேற்பட்ட அப்பாவி மக்கள் அநியாயமாக கொல்லப்பட்டனர்.

தீவகத்தையும், யாழ்ப்பாணத்தையும் இணைக்கும் பண்ணைப் பாலம், கோட்டை இராணுவத்தாலும் யுத்த விமானங்களாலும் தடைசெய்யப்பட மண்கும்பான், அல்லைப்பிட்டி, மண்டைதீவு மக்கள் தமது கிராமங்களைவிட்டு வெளியேறமுடியாமல் திண்டாடினர்.

மூன்று கிராமத்து மக்களும் மண்டைதீவு திருவெண்காடு சித்திவிநாயகர் ஆலயம், அல்லைப்பிட்டி தேவாலயம், மண்கும்பான் பள்ளிவாசல் ஆகிய இடங்களில் தஞ்சம் அடைந்தனர்.

இராணுவ நகர்வை அறியாமல் வீடுகளில் இருந்தவர்கள் இராணுவத்தால் சுட்டுக்கொல்லப்பட்டனர். இது தவிர இராணுவத்தால் கைது செய்யப்பட்டு அழைத்துச் செல்லப்பட்ட மண்டைதீவு, அல்லைப்பிட்டி, மண்கும்பான் ஆகிய இடங்களைச் சேர்ந்த 25 இளைஞர்களுக்கு என்ன நடந்தது என்பது இதுவரை தெரியாத மர்மமாகவே உள்ளது.

தம்மோடு வருகின்றவர்களுக்கு தாம் பாதுகாப்பு வழங்குவோம் என்ற உறுதிமொழியை நம்பிச் சென்ற 25 இளைஞர்களும் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்ற முடிவை எந்த விசாரணைகளும் விளக்கமும் இன்றி எடுக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

1990 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 25 ஆம் திகதி மண்டைதீவை கைப்பற்றிய இராணுவம் அங்கு ஒரு மாத காலம் வரை - அதாவது கோட்டைக்குள் சிக்கியிருந்த இராணுவத்தை மீட்டெடுக்கும்வரை - மண்டைதீவு, அல்லைப்பிட்டி ஆகிய இடங்களை ஆக்கிரமித்திருந்ததோடு வீடுகளிலும் உள்ள பெறுமதி வாய்ந்த சொத்துக்களையும் சூறையாடியது.

அமைதியாக வாழ்ந்த தீவக மக்களின் வாழ்வில் பெரும் அவலத்தை - மறக்கமுடியாத சோகத்தை ஏற்படுத்திய 90 ஆகஸ்ட் தாக்குதல் குறித்து இதுவரை எதுவித விசாரணைகளோ, விளக்கங்களோ இடம்பெறவில்லை.

இராணுவத்தால் கைதுசெய்யப்பட்ட 25 இளைஞர்களை தேடி அலைந்த பெற்றோர், நீதிமன்றம் வரை சென்று நீதி கேட்டனர். முடிவு எதுவுமே இல்லை. அப்பாவி இளைஞர்களை கைதுசெய்த இராணுவ அதிகாரிகள் இன்னமும் இராணுவ சேவையில் - உயிரோடு இருக்கும்போது அவர்களை விசாரித்து உண்மை நிலையைக் கண்டறிய அரசு தவறிவிட்டமை, தீவக மக்களுக்கு இழைக்கப்பட்ட பெரும் கொடூரமாகும்.

காணாமற்போன தங்கள் பிள்ளைகள் வீடு திரும்புவார்கள் என்ற நம்பிக்கையோடு இன்று வரை காத்திருக்கும் பெற்றோர்களின் சோகக் கதை ஏனோ வெளியில் தெரியாமல் பாராளுமன்றம் செல்லாமல் அமுங்கிப்போயிற்று.

இத்தகைய விசாரணைகளற்ற இராணுவத்தின் தீர்ப்பிற்கு தீர்ப்புக் கிடைக்க யாரேனும் உதவி செய்வார்களா?

# புலிகளிடம் இடைக்கால நிர்வாகம் வழங்கப்பட்டால் நாட்டின் ஐக்கியத்திற்குப் பெரும் பாதிப்பு

## தேசிய பிக்குகள் முன்னணி சுட்டிக்காட்டு

(கொழும்பு)

வடக்கு- கிழக்கில் உள்ள சகல இன சமூகங்களினதும் உரிமைகளை நிலைநாட்டி நாட்டின் ஐக்கியத்தையும் வரலாற்றுப் பாரம்பரியத்தையும் பேணிக்காப்பது தேசிய பிக்குகள் முன்னணியின் நோக்கம் என முன்னணியின தலைவர் சங்கைக்குரிய பம்பர அமிலதேரர் தெரிவித்துள்ளார்.

கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற தேசிய பிக்குகள் முன்னணியின் விசேட கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப்புலிகளிடம் இடைக்காலத் தன்னாட்சி அலகை வழங்கினால் தாய்நாட்டின் ஐக்கியத்திற்கு மோசமான பாதிப்பு ஏற்படும்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத்தைப் பாதுகாப்பதற்கு சகல மக்களும் அர்ப்பணிப்புடன் செயாலாற்றவேண்டும். அரசாங்கத்திற்கு எதிராகப பல்வேறு சக்திகள் அணிதிரள்வதாகத் தெரியவருகிறது.

நாட்டிலுள்ள கட்சிகள் ஐக்கியமின்றிச் செயற்படுமானால் பிரிவினைவாதிகளின் தீய எண்ணங்கள் விரைவில் கைகூடிவிடும்.

வடக்கு- கிழக்கில் ஜனநாயகத்தை நிலைநாட்டி நீதியான தேர்தல்களை நாடத்துவதற்கான காலம் நெருங்கி வந்துவிட்டது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, தேசிய பிக்குகள் முன்னணியின் பொதுச் செயலாளர் சங்கைக்குரிய கலவல்கல சந்தாலோக தேரர் அங்கு கருத்துத்தெரிவிக்கையில்,

ஐக்கிய தேசியக் கட்சிக்கும் விடுதலைப் புலிகளுக்கும இடையே கடந்த 2002ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் கைச்சாத்திடப்பட்ட போர் நிறுத்தப் புரிந்துணர்வு உடன்படிக்கை மூலம் தனிநாடு ஒன்றைப் பிரித்தெடுப்பதற்கான முயற்சிகளை விடுதலைப்புலிகள் பலப்படுத்தி வருகின்றார்கள் எனக் குறிப்பிட்டார்.

(ற-121)

## அபிவிருத்திக்கான புதிய கொள்கை செப்ரெம்பர் 4இல் வெளியீடு

(கொழும்பு)

நாட்டின் அபிவிருத்திக்கான புதிய கொள்கை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 4ஆம் திகதி வெளியிட்டு வைக்கப்படவுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் உறுப்பினரும், சுகாதார அமைச்சருமான நிமால் சிறிபால டி சில்வா மற்றும் கட்சி உறுப்பினர்களான மைத்திரிபால சிறிசேன, மங்கள சமரவீர ஆகியோர் நேற்று முன்தினம் கொழும்பில் நடாத்திய ஊடகவியலாளர் மாநாட்டிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 53வது வருட நிறைவு நிகழ்வுகள் காலியில் செப்ரெம்பர் மாதம் நடைபெறும் போதே இந்தக் கொள்கைப் பிரகடனம் வெளியிட்டு வைக்கப்படவிருக்கிறது.

இதேவேளை, 1951ஆம் ஆண்டு செப்ரெம்பர் 2ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 53வது வருட நிறைவை முன்னிட்டு பத்திரமுல்லையில் அமைக்கப்படவிருக்கும் புதிய கட்சித் தலைமையகத்திற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையில் எதிர்வரும் இரண்டாம் திகதி நடைபெறவிருக்கிறது.

இந்தக் கட்டடம் சுமார் 100 பில்லியன் ரூபா நிதி செலவில் அமைக்கப்படவிருக்கிறது. (ற-க,121)

## சேதமடைந்த கேபிள்களின் ஒருபகுதி மீட்கப்பட்டது

(கொழும்பு)

ஸ்ரீலங்கா ரெலிக்கொம் நிறுவனத்தின் சர்வதேச வலைப்பின்னல் சேவைக்குரிய சேதமடைந்த கேபிள்களின் ஒருபகுதியை மீட்புப் பணியாளர்கள் கண்டெடுத்துள்ளதாக ரெலிக்கொம் நிறுவனத்தின் சர்வதேச சேவைக்கான பொது முகாமையாளர் மகிந்தஹேரத் தெரிவித்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை இந்தியக் கப்பல் ஒன்றினால் சேதமாக்கப்பட்ட இணையத்தளத்திற்கான கேபிள்களை நேற்று முன்தினமிரவு முதல் மீட்புப் பணியாளர்கள தேடி வருகின்றனர்.

இந்நிலையிலேயே சேதமடைந்த கேபிள்களின் ஒருபகுதி தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதன் மற்றைய பாகமும் கண்டெடுக்கப்பட்ட பின்னர் இது தொடர்பாக மேற்கொள்ளப்பட வேண்டிய ஏனைய நடவடிக்கைகள் குறித்து முடிவுகள் எடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, சேதமடைந்த இக் கேபிள்களை மீட்கும் பணயில் இந்தியக்கப்பல் ஒன்றும் ஈடுபட்டு வருகின்றது. (ற-க,61)

## அரிசி விலையுயர்வைக் கட்டுப்படுத்த அதனை இறக்குமதி செய்யத் தீர்மானம்

(கொழும்பு)

அரிசியின் விலையைக் கட்டுப்படுத்துவதற்காக அரிசியை இறக்குமதி செய்வதற்குத் தீர்மானித்துள்ளதாக வர்த்தக நுகர்வோர் விவகார அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே தெரிவித்துள்ளார்.

அரிசியை இறக்குமதி செய்வது தொடர்பாக இலங்கைக்கான பாகிஸ்தான் தூதுவருடன் தற்போது பேச்சுவார்த்தைகள் நடாத்தப்பட்டு வருகின்றன.

அரிசியின் விலை தற் சமயம் வெகுவாக அதிகரித்துள்ளது. இவ்வாறு இதன் விலை அதிகரித்துச் சென்றால் எதிர்காலத்தில் அரிசியின் விலையில் வீழ்ச்சி ஏற்படுமென்பதை எதிர்பார்க்க முடியாது.

அண்மையில் அக்கரைப்பற்று மற்றும் சம்மாந்துறை ஆகிய பகுதிகளுக்குச் சென்று அப்பகுதி விவசாயிகளுடன் நடாத்திய கலந்துரையாடலின் போது அவர்களும் அரிசியின் விலை எதிர்காலத்தில் அதிகரிக்கும் என்று தெரிவித்ததாகவும் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே மேலும் குறிப்பிட்டுள்ளார். (ற-க)

## இலங்கைக்கான சர்வதேச நிதியுதவியை நிறுத்துவதற்கு உலகவங்கி தீர்மானம்

(கொழும்பு)

இலங்கைக்கான சர்வதேச நிதியுதவிகளை இடைநிறுத்துவது குறித்து ஆராயும் மாநாடு ஒன்று எதிர்வரும் ஒக்டோபர் மாதம் நடைபெறவுள்ளதாக உலக வங்கி தெரிவித்துள்ளது.

சமாதான முயற்சிகளில் தோன்றியுள்ள இழுபறி நிலைகாரணமாக இலங்கைக்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்ட சர்வதேச நிதி பயன்படுத்தப்படாத நிலையில் முடக்கப்பட்டுள்ளதாக உலகவங்கி சுட்டிக்காட்டியுள்ளது.

இந்நிதியை வேறு தேவைகளுக்குப் பயன்படுத்துவது குறித்து இம்நாட்டில் ஆராயப்படவுள்ளதாகத் தெரிவித்துள்ளது.

ஐக்கிய தேசிய முன்னணி அரசின் ஆட்சிக் காலத்தல் முன்னெடுக்கப்பட்ட 'இலங்கையை மீளக்கட்டியெழுப்புவோம்' என்ற திட்டத்திற்கு உலகவங்கி 17 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவியை வழங்க முன் வந்திருந்தது.

இந்நிலையில் இலங்கையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டதுடன் ஆட்சிக்கு வந்த ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் ''நாட்டை முன்னேற்றுவோம்'' என்ற தொனிப்பொருளில் புதிய திட்டம் ஒன்றை முன்வைத்தது.

ஆனால் இந்தத்திட்டம் கொள்கைளயவிலேயே சிறப்பானதாக இருந்தது. இதனால் இதனை நடைமுறைப்படுத்த முடியாது என உலகவங்கி தெரிவித்துள்ளது.

அத்துடன், ஐக்கிய தேசிய முன்னணி அரசின் காலத்தில் முன்வைக்கப்பட்ட 'இலங்கையை மீளக்கட்டி யெழுப்புவோம்' என்ற திட்டத்தில் நடைமுறைப்படுத்தக் கூடிய விடயங்கள் குறித்து தமக்கு ஒக்ரோபர் மாதத்திற்கு முன்பாக அறிவிக்கவேண்டும் எனவும் உலகவங்கி கேட்டுள்ளது. (க)

## போலி ஆவணங்களுடன் தே.அ.அட்டை பெறமுயன்ற தமிழ்ப்பெண் கைது


(கொழும்பு)

போலி ஆவணங்களைச் சமர்ப்பித்து தேசிய அடையாள அட்டை பெறுவதற்குச் சென்ற தமிழ்ப்பெண் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மட்டக்களப்பில் இருந்து கொழும்பு சென்ற இந்தப் பெண் ஆட்பதிவுத் திணைக்களத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்த போதே பொலிஸார் இவரைக் கைது செய்ததாக கொழும்பு பிரதேச பிரதிப் பொலிஸ்மா அதிபர் சிறிசேன ஹேரத் தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்ட பெண்ணிடம் இருந்து 2 போலிப் பிறப்புச் சான்றிதழ்கள் கைப்பற்றப்பட்டதாகவும் இது தொடர்பான விசாரணைகளை பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ற-க,61)

## சாயி அருளமுதம்



இளம் உள்ளங்களில் அன்பை விளைவிக்க வேண்டும். ஜாதி, இன, மொழி வேறுபாடுகளினால் விளையும் பகைமை மறைய வேண்டும். அப்போது ஒற்றுமை பிறக்கும். ஒற்றுமை தூய்மையை விளைவிக்கும். தூய்மை தெயவீகத்தைத் தரும். அந்த நிலையில் கல்வியால் அறிவு மட்டுமன்றி ஞானமும் உண்டாகும். அப்படிப்பட்ட மாணவ, மாணவியர் நாட்டுக்கு நல்ல எதிர்காலத்தைத் தருவார்கள்.

நன்றி
நாளாந்த நற்சிந்தனை

## வவுனியாவில் சடலம் மீட்பு

(வவுனியா)

வவுனியா பொலிஸ் தலைமையகத்திற்குட்பட்ட கோவில்குளம் பிரதேசத்தில் சடலம் ஒன்று நேற்று மாலை பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர் எம். இராமலிங்கம் (வயது 48) என அடையாளம் காணப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸ் தலைமையக இன்ஸ்பெக்டர் வசந்தபீரிஸ் தெரிவித்தார்.

சடலத்தை அவரது மகன் அடையாளம் காட்டினார். இம் மரணம் எவ்வாறு நிகழ்ந்துள்ளது என்பது குறித்து இன்னும் கண்டறியப்படவில்லை என வவுனியா பொலிஸார் தெரிவித்தனர். தற்போது சடலம் வவுனியா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (த-121)

## ஜெகோவா சாட்சிகளின் மாவட்ட மாநாடு

"கடவுளோடு நடவுங்கள்" என்னும் பொருளில் ஜெகோவாவின் சாட்சிகளின் மாவட்ட மாநாடு எதிர்வரும் 27,28,29 ஆம் திகதிகளில் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்ச்சி தினமும் காலை 9.40 மணிக்கு ஆரம்பமாகி முதல் இரண்டு தினங்களும் பிற்பகல் 4.35 மணிக்கும் இறுதிநாள் பிற்பகல் 3.30 மணிக்கும் நிறைவு பெறும்.

29 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11.10 மணிக்கு "நற்செய்திக்கு முழுமையாக சாட்சி கொடுத்தல்" என்னும் பொருளில் நாடகம் ஒன்றும் பிற்பகல் 2.00 மணிக்கு "கடவுளோடு நடப்பதால் இன்றும் என்றும் ஆசீர வாதங்கள்" என்னும் பொருளில் பகிரங்க சொற்பொழிவு ஒன்றும் இடம்பெறவுள்ளது. (ற-க)

## பட்டதாரிகளுக்கு நியமனக் கடிதம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் பட்டதாரிகளுக்கான பயிற்சி நியமனம் பெற்ற 538 பட்டதாரிகளுக்கும் அடுத்த மாதம் 2 ஆம் திகதி வியாழக்கிழமை கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தில் வைத்து உத்தியோகபூர்வமாக நியமனக் கடிதங்களை வழங்கவுள்ளதாக யாழ்ப்பாணம் தேசிய இளைஞர் சேவை மன்ற உதவி இயக்குநர் ரி. சிவதட்சணாமூர்த்தி தெரிவித்துள்ளார். (ம)

### பொலிஸ்...

வந்தோம்.

சம்பவத்தை விசாரிக்கவே இங்கு வந்துள்ளோம். அதற்கான தீர்ப்பைக் காணமுயற்சிப்போம். கிழக்குச் சம்பவங்கள் தொடர்பில் வெருகலுக்கும் அம்பாறைக்குமிடைப்பட்ட அரச கட்டுப்பாட்டு பிரதேசத்திலேயே பெரும்பாலான கொலைகள் நடைபெற்றுள்ளன என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். இவ்வாறு கண்காணிப்புக்குழுவின் பிரதித் தலைவர் ஹொக்லன்ட் தெரிவித்துள்ளார். (ச)

### டிப்ளோமா...

வைத்துள்ளார்.

பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்குதல் தொடர்பாக இரண்டாவது தடவையாக வெளியிடப்படவுள்ள பெயர்ப் பட்டியலில் உயர் தேசிய டிப்ளோமாப் பட்டதாரிகளின் பெயர்கள் வெளியிடப்படும் என அவர் அக் கடிதத்தில் உறுதியளித்துள்ளார்.

பட்டதாரிகள் நியமனத்தில் தமது பெயர்களும் இடம்பெற வேண்டுமென உயர்தேசிய கணக்கியல், வர்த்தக, முகாமைத்துவப் பட்டதாரிகள் சங்கம் மறியல் போராட்டங்களில் ஈடுபட்டமை தெரிந்ததே. (ச)

### சமாதான...

அண்மைக்காலமாக இடம்பெற்றுவரும் படுகொலைச் சம்பவங்கள் தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகளும் இராணுவத்தினரும் ஒருவர் மீது ஒருவர் குற்றம் சுமத்தும் முறைப்பாடுகள் அதிகரித்துள்ளன.

சமாதானத்தையும், போர்நிறுத்த ஒப்பந்தத்தையும் பாதுகாத்து சமாதானச் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படாவிட்டால் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் நாட்டை இன்னுமொரு யுத்தத்திற்கு இட்டுச் செல்லும் என்பதில் ஐயமில்லை.

நாட்டில் தற்போதைய சூழ்நிலை பாரிய பிரச்சினையாக உருவெடுக்கும் சாத்தியக் கூறுகள் இருக்கின்றன. உள்விவகாரப் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொண்டு சமாதானச் செயற்பாடுகள் தொடர்பாக அரசாங்கம் பொதுவான நிலைப்பாடு குறித்து தெளிவுபடுத்த வேண்டும் என்றும் ரணில் விக்கிரமசிங்க கேட்டுள்ளார். (ச-121)

### புலிகள்...

எனவே இராணுவத்தினர் மீது மேற்கொள்ளப்படும் தொடர்ச்சியான தாக்குதல்களை பொறுமையோடு சகித்துக் கொண்டிருக்க முடியாது. இராணுவத்தினர் மீது யாராவது தாக்குதல் நடாத்த முற்பட்டால் அவர்கள் மீது திருப்பித் தாக்குதல் நடாத்துவதற்கு இராணுவத்தினருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

கருணா அணியினருக்கு இராணுவத்தினர் உதவுவதாகக் கூறி விடுதலைப் புலிகள் இராணுவத்தினர் மீது தாக்குதல் நடாத்தி வருகின்றனர்.

ஆனால், கருணா அணியின்ருக்கும் இராணுவத்தினருக்கும் எதுவித தொடர்புமில்லை. கருணா அணியினருக்காக ஒத்துழைக்க வேண்டிய அவசியம் இராணுவத்திற்கில்லை என்று இராணுவத் தளபதி மேலும் தெரிவித்தார். (ச,ப)

## விடுதலைப்புலிகள் ஆயுதரீதியாக...

ஹெவ்டே குழுவினர் கலந்துகொண்டனர்.

இதனைத் தொடர்ந்து நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் சு.ப. தமிழ்ச்செல்வன் தொடர்ந்து கூறியதாவது,

சமாதானச் செயலகத்தில் நேற்று முற்பகல் 11.30 மணிக்கு நடைபெற்ற சந்திப்பில் யுத்த நிறுத்த நடைமுறைகள் சம்பந்தமாகவும் அதனைப் பேணுவது சம்பந்தமாகவும் தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை சம்பந்தமாகவும் விரிவாக ஆராய்ந்ததுடன் எமது தலைமைப் பீடத்தின் நிலைப்பாடுகளையும் அவர்களுக்கு தெளிவாக்கியுள்ளோம்.

**புலிகளின் பகுதிகளுக்குள் படை அனுப்புவது யுத்தநிறுத்த மீறலாகும்.**

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் தமது படைகளை அனுப்புவதாயின் யுத்த நிறுத்த உடன்பாட்டை மீறியே அந் நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும். ஜனாதிபதியின் கருத்துக்களை வைத்துக்கொண்டு இதில் அதிகாரபூர்வமான கருத்து எது? அதிகாரபூர்வமற்ற கருத்து எது என்று அறியாமல் நாம் கருத்துக்களைக் கூறுவது பொருத்தமில்லை. தினம் தினம் அவரது கருத்துக்கள் வெளியாகிக்கொண்டிருக்கின்றன. ஆனால், எங்களைப் பொறுத்தவரையில் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் என்ற வகையிலும் அனுசரணையாளர் என்ற வகையிலும் அவர்கள் தருகின்ற உத்தரவாதங்களின் அடிப்படையில் யுத்தநிறுத்த உடன்பாட்டை அவர்கள் நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள்.

**புலிகளின் கடற் பிரதேசத்திலேயே பயிற்சியில் ஈடுபடுகின்றனர்.**

முல்லைத்தீவுச் சம்பவத்தைப் பொறுத்தவரையில் பேச்சுவார்த்தையில் நேற்று கலந்துகொண்ட கடற்புலிகளின் தளபதி கேணல் சூசை நிலைமைகளை அவர்களிற்கு விளக்கியுள்ளார். விடுதலைப் புலிகளின் கலங்கள் எங்களுடைய கடற் பிரதேசத்திலேயே பயிற்சிகளிலும், நடமாட்டத்திலும் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றன. இதனை வைத்துக் கொண்டு யுத்தநிறுத்த மீறல் என்று கடற்புலிகள் மீது குற்றம் சாட்டுவது பொருத்தமல்ல. இரண்டு தரப்பினரும் மோதல் நிலைக்கு வந்து யுத்தநிறுத்த மீறல் நடைபெறுகின்ற போது கண்காணிப்புக் குழுவினர் விசாரணைகளை மேற்கொண்டு உண்மை நிலையை அறியாமல் இதனை விடுத்து தவறான தேவையுற்ற குற்றச்சாட்டுக்களை சுமத்தி கண்காணிப்புக் குழுவை இக்கட்டில் சிக்கவைப்பதை அவர்கள் தவிர்த்துக் கொள்ளவேண்டும் என்று தெளிவாக விளக்கினர்.

**கருணா குழுவும் ஈ.பி.டி.பியும் இணைந்து செயற்படுவது அமைதிச் சூழலுக்கு அச்சுறுத்தல்**

தற்போதைய சூழ்நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் கருணா குழுவும், ஈ.பி.டி.பி. குழுவும் இராணுவத்தினருடன் இணைந்து செயற்பட அனுமதித்திருப்பது யுத்தநிறுத்த சூழலுக்கு பாரிய அச்சுறுத்தலை ஏற்படுத்தும் என்று நாம் வலியுறுத்தி வருகிறோம்.

கருணா குழுவில் இருந்து தப்பிச் சென்றவர்களும், ஈ.பி.டி.பி. யினரும் இணைந்து கொழும்பில் செயற்பட்டுக்கொண்டிருக்கின்றனர். அங்கு அவர்களுக்குள்ளே முரண்பாடுகள் ஏற்பட்டு மோதல்கள் உருவாகி ஒருவரை ஒருவர் சுட்டுக் கொன்ற வண்ணம் உள்ளனர் என்று நாம் சந்தேகிக்கின்றோம். இந் நிலையில் விடுதலைப் புலிகள் மீது குற்றம் சுமத்துவதில் எவ்வித அர்த்தமும் இல்லை.

**மாற்று யோசனை எதனையும் அரசு சமர்ப்பிக்கவில்லை.**

எம்மால் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால தன்னாட்சி அதிகார சபை யோசனைக்கு எந்தவித மான மாற்று யோசனைகளையும் அரசு இன்றுவரையும் எமக்கு சமர்ப்பிக்கவில்லை. கடந்தகால அரசாங்கங்களினால் சமர்ப்பிக்கப்பட்ட யோசனைகள் எமது மக்களின் அபிலாசைகளை பூர்த்தி செய்வனவாக அமைந்திருக்கவில்லை. இதனால் அவற்றை நாம் பல தடவைகளிலும் நிராகரித்துள்ளோம் என்று தமிழ்ச்செல்வன் மேலும் தெரிவித்தார். (ம)

### தீவுப்பகுதி...

பணியில் ஈடுபடும்.

அம்புலன்ஸ் படகு இல்லாமல் அவதியுற்ற தீவுப்பகுதி மக்களுக்கு இப் படகு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

### அரசும்...

பாடுகள் என்பன குறித்து ஆராய்வதற்காகவே நோர்வே அதிகாரிகள் நேற்றைய தினம் யாழ்ப்பாணம் வந்திருந்தனர். (ச,19)


வர்த்தக வீதி உலா
நல்லூர் உற்சவத்தை முன்னிட்டு

மாபெரும் வர்த்தக வீதி உலா

மீண்டும் யாழ் மண்ணில்

உங்கள் அபிமான Zenith joe/எகட்டனின் ஏற்பாட்டில் J.J திரைப்படப்புகழ் பொப்பிசைச் சக்கரவர்த்தி A.E. மனோகரனுடன் இளையதலைமுறை இசையமைப்பாளர் கீதப்பிரியனின் இசையில் உங்கள் முதல்தர வானொலி சக்தி Fm, சக்தி T.V யினர் வழங்கும் மாபெரும் வர்த்தக வீதி உலா.

உங்கள் முதல்தர வானொலி சக்தி Fm, சக்தி T.V யின் மொபைல்விஷன் தாங்கிவரும் Todaio திரையில் எமது கலைஞர்களின் இசை நிகழ்ச்சியை நீங்கள் பார்த்து இரசிக்கலாம்.

இன்று முதல் எதிர்வரும் 30 வரை

உங்கள் அபிமான பொப்பிசைச் சக்கரவர்த்தி A.E மனோகரனை நீங்கள் நேரில் சந்தித்து அவருடன் ஆடிப்பாடி மகிழ்ந்து பெறுமதிமிக்க பரிசில்களையும், அன்பளிப்புக்களையும் தட்டிச் செல்லுங்கள்.

| | |
|---|---|
| இன்று | காலை 10.30க்கு யாழ்ப்பாணத்தில் ஸ்ரான்லி வதியிலும் மாலை 5.00 மணிக்கு பஸ் நிலையத்திலும். |
| 27.08.2004 | காலை 10.30க்கு மானிப்பாயிலும் மாலை 5.00 மணிக்கு சங்கானையிலும் |
| 28.08.2004 | காலை 10.30க்கு சுன்னாகத்திலும் மாலை 5.00 மணிக்கு சாவகச்சேரியிலும் |
| 29.08.2004 | காலை 10.30க்கு பருத்தித்துறையிலும் மாலை 5.00 மணிக்கு நெல்லியடியிலும் |

30.08.2004 காலை 10.30க்கும் மாலை 5.00 மணிக்கும் நல்லூரிலும்

வீதி உலாவுக்கு உங்களை அன்புடன் அழைக்கிறார்கள்

Zenith Joe/எகட்டன்
உங்கள் முதல்தர வானொலி சக்தி Fm
சக்தி T.V. நிறுவனத்தார்.

இந்நிகழ்ச்சிக்கான பிரதான அனுசரணையாளர்கள்:

1) நீலன் பாமசிக்கல் Private limited - பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
2) பாலன் பாமசி - சந்தை வீதி, வவுனியா.
3) நீலன் பாமசி - பிரதான வீதி, கிளிநொச்சி.
4) பாலன் Health Care - ஓட்டுமடம் வீதி, யாழ்ப்பாணம்.
5) ஈழவாணி Films limited, யாழ்ப்பாணம்.

எண்ணம், எழுத்து, வடிவம்
Joe/எகட்டன் Zenith Marketing And Advertising Systems
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். (c/426)



JAFFNA MEDICAL ASSOCIATION

Annual Sessions August 27th - 29th.2004

The Jaffna Medical Association
Cordially invites

All Doctors and Medical Students

to the

Inauguration ceremony and the Annual Sessions 2004

On 27.08.2004 at 9.30 am

at Nurses Training School { Teaching Hospital, Jaffna }

&

V.Pasupathy Memorial lecture & Cultural programme
on 20.08.2004 - at 4.00 pm
at Kailasapathy Auditorium, University of Jaffna.

Chief Guest : Dr. M.Ganesharatnam
Consultant Surgeon & Visiting professor of Surgery
University of Jaffna

(C/401)


இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.08.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.